
# டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கம்

நமக்கு நாம்!   நாடு நமது!

தோற்றம்: 14.04.1987

ஏப்ரல் 2025

# ரெட்டி பண்பாடு

## REDDY PANPADU

காலாண்டிதழ்

రెడ్డిపాన్పాడు | ರೆಡ್ಡಿ ಪನ್ಪಾಡು | റെഡ്ഡി പൻപാട്



# நெஞ்சில் நிறைந்தவர்கள்!

புதிய தொடர்

இனிய
யுகாதி
வாழ்த்துகள்!




கொரட்டூர், சென்னை

✆ 9382166995
DR. ASHOK KUMAR

## ரெட்டி பண்பாடு

**கௌரவ ஆசிரியர்**
திரு.K.நாராயணன் ரெட்டி, திருச்சி
94883 83053

**சிறப்பாசிரியர்**
திரு.M.V.வைத்திலிங்கம் ரெட்டியார்,
புதுச்சேரி
98431 33287

**ஆசிரியர்**
திரு.R.பட்டாபி ரெட்டியார், சென்னை
99417 25914

**இணை ஆசிரியர்கள்**
திரு.G.கிருபாகரன் ரெட்டியார், திண்டிவனம்
94433 55481
திரு.J.நேமிதாஸ் ரெட்டியார், சென்னை
94449 30369

**ஆலோசனை குழு**

**முதன்மை ஆலோசகர்:**
திரு.N.கிருஷ்ணமூர்த்தி ரெட்டி,
வழக்கறிஞர், வேலூர்
96290 06727

திரு.P.R.நரசிம்மன் ரெட்டியார்,
சென்னை
98840 20039

திரு.R.பட்டாபிராமன் ரெட்டியார்,
மதுரை
93441 59399

திரு.M.V.ராமதாஸ் ரெட்டியார்,
சென்னை
94444 13142

திரு.S.முத்துகிருஷ்ண ரெட்டியார்,
சென்னை
805620 2324

திரு.Dr.V.ஜனார்த்தன ரெட்டி,
கோயம்புத்தூர்
94422 55311

திரு.Ln.Dr.Y.V.S.ரெட்டி, ஓசூர்
94432 07799

திருமதி.Dr.R.அனிதா சாந்தகுமார்,
பாண்டிச்சேரி
96003 86736

**பதிப்பாளர்**
டேக்பான் ரெட்டி நலச்சங்கம்
24, பிரதான சாலை, சித்தன்குடி,
பாண்டிச்சேரி - 605013

**வடிவமைப்பு:**
சக்தி கிரியேட்டர்ஸ்,
98410 25280

**இதழ் ஆக்கம்:**
செல்வமுத்துக்குமரன்


*அன்பு சொந்தங்களே! வணக்கம்!*
*நலம்.. நலம் நாட நாட்டம்!*

**ந**மக்கு நாம் நாடு நமது!!



தங்களை இந்த இதழின் மூலம் மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தங்களின் பாராட்டுதலுக்கும், ஆலோசனைகளுக்கும், மிக்க நன்றி.

2024 ஜனவரியில் சென்னையில் நடந்த மகளிர் மற்றும் இளைஞர்கள் கருத்தரங்க மாநாட்டிற்கு உண்டான பணிகளை செய்வதற்கு நானும், செயலாளர் திரு.கிருபாகரன் ரெட்டி அவர்களும் சுற்றுப்பயணத்தில் இருந்ததால் தொடர்ந்து 'ரெட்டி பண்பாடு' இதழை அனுப்ப இயல வில்லை.

இந்த இதழில் சென்னை கொரட்டூர் கே.ஜி.ஜே. மருத்துவமனையின் டாக்டர் ஜே.அசோக் குமார் அவர்கள் அளித்த பிரத்யேக நேர்காணல் நமக்கு பெருமை சேர்ப்பதாகும். மேலும் இந்த இதழ் மூலம் என்னுடைய யுகாதி வாழ்த்துகளையும், தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளையும் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த இதழில் என்னுடைய வாழ்க்கை பயணத்தில் பயணித்தவர்களின் நினைவாக **'நெஞ்சில் நிறைந்தவர்கள்'** எனும் தொடரை வெளியிடுகிறேன். இத்தொடர் குறித்த தங்களின் கருத்தை அறிய ஆவலாக இருக்கிறேன்.

நமது சமுதாயத்தினர் வைத்திருக்கும் வணிக நிறுவனங்களின் மூலமாக இதழின் வளர்ச்சிக்கு விளம்பரம் பெற்றுத் தாருங்கள். சந்தா விபரமும் இந்த இதழில் உள்ளது, சந்தாவை செலுத்தி உதவுங்கள். உங்கள் ஆலோசனைகளை எங்களுக்கு தெரிவியுங்கள்.

நீங்கள் அனுப்பும் குடும்ப செய்திகள், கலந்து கொண்ட நம் சமுதாய நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஒளிப்படங்களோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள்! பிரசுரிக்கிறோம்! நமது சமுதாயத்தினர் வைத்திருக்கும் வணிக நிறுவனங்களின் மூலமாக இதழின் வளர்ச்சிக்கு விளம்பரம் வாங்கித் தாருங்கள்! சந்தா விபரமும் இதழில் உள்ளது. சந்தாவை செலுத்தி உதவுங்கள்! உங்கள் ஆலோசனைகளை எங்களுக்கு தெரிவியுங்கள்.

தொடர்ந்து பயணிப்போம். இணைந்து சாதிப்போம்.

என்றும் அன்புடன்..
**ம.வெ.வைத்திலிங்கம் ரெட்டி**
வழக்குரைஞர்,
தலைவர் 'டேக்பான்' (ஆறு மாநில) ரெட்டி நல சங்கம்
98431 33287



# கோவிலடி

**ஊர்ப்பெயர் காரணம்**

இந்த திவ்ய தேசம் திருவரங்கத்திற்கு முன்னதாக ஏற்பட்டது. அதன் காரணமாக இதனை ஆதிதிருவரங்கம் என்றும் சொல்வார்கள்.

பெருமாள் திருவரங்கத்தின் கால் வைக்கும் முன்பு இங்கு ஆதியாக அடியெடுத்து வைத்ததால் இங்குள்ள கோயில் கோவிலடி எனப்பட்டது.

**புராணம்**

முன் காலத்தில் உபமன்யூ என்ற மன்னன் துருவாச முனிவரால் சபிக்கப்பட்டிருந்தான் சாபமுற்ற மன்னன், தன் தவறை உணர்ந்து துருவாச முனிவரிடம் சாப விமோசனம் என்ன என்று கேட்டான்.

அதற்கு துருவாச முனிவர் “தினசரி இந்த திவ்ய தேசத்தில் ஒரு லட்சம் பேருக்கு நீ அன்னதானம் செய்து வந்தால் உன்னுடைய சாபம் விலகும்” என்றார்.

சாப விமோசனத்திற்காக உபமன்யூவும் இங்குள்ள கோயிலுக்கு அருகில் ஒரு அரண்மனையை கட்டிக் கொண்டான்.

தினமும் ஒரு லட்சம் பேருக்கு அன்னதானம் வழங்கினான் அது நீண்ட காலமாக நடந்து வந்தது. அவனுக்கு சாப விமோசனம் கொடுக்க எண்ணி பெருமாள் தானே ஒரு கிழ பிராமணராக வேடம் தாங்கிக்கொண்டு வந்து அவனிடம் உணவு கேட்டார்.

ஆனால் அங்கு ஒரு ஆச்சர்யம் நிகழ்ந்தது. அந்த வயதான பிராமணர் அன்னதானத்திற்காக வைத்திருந்த அத்தனை ஆகாரங்களையும் அவரை உண்டு சாப்பிட்டு முடித்து விட்டார்.



அத்தனையும் உண்டபின்னும் பெருமாள் தன் இருக்கையில் இருந்து எழுந்திருக்கவில்லை. அதனைக் கண்ட அஞ்சிய மன்னன், "தங்களுக்கு வேறு என்ன வேண்டும்" என்று வினவினான்.

"எனக்கு ஒரு கூடை அப்பம் வேண்டும்" என்றார்.

அதனைக் கேட்ட மன்னன் தனது வேலையாட்களை ஏவி ஒரு கூடை நிறைய அப்பம் தயாரித்து கொண்டு வந்து கொடுத்தான்.

அந்த அப்பக் கூடையை அந்தணர் கையில் வாங்கியபோது உபமன்யூவின் சாபம் மறைந்து விட்டது. பெருமாள் மன்னனுக்கு காட்சி அளித்து மறைந்தார். அதனால் இந்த பெருமாளுக்கு அப்பக் குடத்தான் என்ற பெயர் ஏற்பட்டது.

அதன் காரணமாகத்தான் இங்குள்ள பெருமாள் வலது கையில் அப்பக்குடத்தை அணைத்தவாறு காட்சி அளிக்கின்றார். இங்குள்ள பெருமாளுக்கு தினமும் மாலையில் அப்பம் அமுது செய்யப் படுகிறது.

## கோயில் அமைப்பு

இத்தலத்தில் இறைவன் மேற்கு நோக்கிய கோலத்தில் புஜங்க சயனத்தில் அருள்பாலிக்கிறார். மூலவர் சன்னதியின் மேல் உள்ள விமானம் இந்திர விமானம் எனப்படுகிறது.

இத்தலத்தில் வழிகாட்டி விநாயகர் உள்ளார். உபமன்யூ, பராசரர் ஆகியோர் இத்தல இறைவனை தரிசனம் கண்டுள்ளனர்.

## இலக்கியம்

இந்த திருத்தலத்தை திருமழிசையாழ்வார் ஒரு பாசுரத்திலும் நம்மாழ்வார் 11 பாசுரங்களாலும்,



பெரியாழ்வார் இரண்டு பாசுரங்களாலும், திருமங்கை யாழ்வார் 19 பாசுரங்களாலும் மங்களாசாசனம் செய்து உள்ளனர்.

## மூர்த்தி

அப்பக்குடத்தான். அப்பால் ரெங்கநாதன். ஆராவயிற்றான் என்னும் திருப்பெயரும் வழங்கப் படுவதுண்டு.

புஜங்கசயனம் மேற்கே திருமுக மண்டலம். அருகில் அமர்ந்திருக்கும் உபமன்யூ முனிவருக்கு ஆசிகூறும் பெருமாளின் வலது கரம் ஒரு அப்பக்குடத்தை அணைந்திருக்கிறது. தாயார் திருநாமம் இந்திராதேவி, கமலவல்லி என்பதாகும்.

## ஸ்தலம்

இந்த திவ்ய தேசம் காவிரி கொள்ளிடம் ஆறுகளுக்கு இடையில் மேற்கு நோக்கிய மூன்று பெரிய ராஜகோபுரங்களுடன் காட்சி அளிக்கின்றது. இங்குள்ள விமானம் இந்திர விமானமாகும். இது பஞ்சரங்க ஸ்தலங்களில் ஒன்றாக கருதி போற்றப்படுகிறது.

## விருட்சம்

இந்த திவ்ய தேசத்தின் தல விருட்சமாக வில்வ மரம் உள்ளது.

## தீர்த்தம்

இந்திர தீர்த்தம், கொள்ளிடம் ஆகியவை இந்த ஆலயத்தின் தீர்த்தங்களாக விளங்குகின்றது.

## திருவிழாக்கள்

இந்த ஆலயத்தில் பங்குனி உத்திரம் அன்று தேர், தீர்த்தவாரி உற்சவங்கள் நடைபெறுகிறது.

மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அத்துடன் நவராத்திரி உற்சவம். கிருஷ்ணனுக்கு உறியடி உற்சவம் ஆகியவை இந்த ஆலயத்தின் திருவிழாக்கள் ஆகும்.

## பூஜைகள்

இங்கு பஞ்சராத்ர ஆகம முறைப்படி பூஜைகள் நடைபெறுகிறது.

## வழிபடுவதால் ஏற்படும் பலன்கள்

நீண்டகாலமாக குழந்தைப்பேறு வாய்க்கப் பெறாத தம்பதிகள் இக்கோயிலுக்கு வந்து பெருமாளை சேவித்து சந்தான கிருஷ்ணனை மடியில் வாங்கினால் புத்ர பாக்கியம் உண்டாகும்.

இத்தலத்துக்கு வந்து பெருமாளுக்கு அப்பம் நிவேதனம் செய்து அதை பக்தர்களுக்கு கொடுத்து வந்தால் கர்மவினைப் பயனால் ஏற்பட்ட தீராத நோய்கள் தீரும்.

தெரிந்தோ தெரியாமலோ பல உயிர்களை நாம் நாள்தோறும் கொன்று வருகிறோம். அவற்றினால் ஏற்பட்ட தோஷங்கள் விலகி நல்வாழ்வு பெற இத்தலத்துப் பெருமானை சேவிப்பது அவசியம்.

SMV


# SMV GROUP

## KOLLAM - KERALA

M/s. SMV (Firm), Kollam
M/s. Sreenivas Fabricsi Kollam
M/s. Vasanth & Co., Kollam
M/s. SMV Associates, Kollam
M/s. SMV Apparesal, Kollam
M/s. Transworld Textiles, Kollam
M/s. Kalpaka Financial Enterprieses, Kollam
M/s. Sreenivas, Kollam
M/s. Kavitha Traders, Kollam
M/s. SMV Associates, Kollam
M/s. Vasanth & Co., Thiruvananthapuram
M/s. Transworld Textils, Thiruvanthapuram
M/s. Vasanth & Co., Kottayam
M/s. Transworld Textiles, Chennai
M/s. Vasanth & Co., Mumbai
M/s. J.N. Trust, Kollam
M/s. Transworld Textiles, Mumbai
M/s. Transworld Textiles, Ahmedabad
M/s. Transworld Textiles, Surat







நல்லவர்களின் மனத்தைப் புண்படுத்திய முன்னோர்களுக்கு ஏற்பட்ட குடும்ப சாபம் நம்மைத் தொடர்ந்து வந்து நிம்மதியைக் கெடுக்கும் அப்படிப்பட்டவர்கள் இங்கு குடும்பத்தோடு வந்து பெருமானை சேவித்து, அப்பம் நைவேத்தியம் செய்து, பக்தர்களுக்கு விநியோகம் செய்தால் திருமணத் தடைகள் நீங்கும்.

நல்ல மாற்றங்கள் உண்டாகும். மனநிறைவும் மகிழ்ச்சியும் ஏற்படும். வைகுண்ட ஏகாதசி திருவிழாவில் பத்து நாட்களும் இங்கு வந்து கலந்து கொண்டவர்களுக்கு மோட்சம் கிடைக்கும் என்பது பெரியோர்களின் நம்பிக்கை.

## தனித்தன்மை

திவ்ய தேசங்களில் பஞ்சரங்க ஸ்தலம் என்று சொல்லக்கூடிய ஐந்து திருத்தலங்களாக 1. ஆதிரங்கம் ஸ்ரீரங்கப்பட்டினம், 2. அப்பால ரங்கம் திருப்பேர்நகர் (கோவிலடி) 3. மத்திய ரங்கம் திருவரங்கம் 4. சதுர்த்த ரங்கம் கும்பகோணம் 5. பஞ்ச ரங்கம் இந்தளூர் (மயிலாடுதுறை) ஆகியவற்றில் இரண்டாவது இடத்தில் இந்தத் திருத்தலம் வருகின்றது.

மேலும், நம்மாழ்வாரால் இறுதியாக மங்களா சாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசமாகவும் விளங்குகிறது. இந்த திவ்ய தேசத்தை பாடிய பின்னர் வேறு எந்த ஊரையும் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் அவர் நேரடியாக முக்தியை அடைந்துவிட்டார்.

## செல்லும் வழி

இந்த திவ்ய தேசம் தஞ்சாவூர் மாவட்டத்தில் வடமேற்கு எல்லையில் உள்ளது. திருக்காட்டு பள்ளியில் இருந்து தஞ்சாவூர் செல்லும் வழியில் அமைந்துள்ளது. கும்பகோணத்தில் இருந்து திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி வழியாகவும் இங்கு செல்லலாம். திருச்சியில் இருந்தும், லால்குடியிலிருந்தும் இந்த திவ்ய தேசம் செல்ல முடியும்.

– தொடரும்

*With Best Compliments From*

House
044-25733297



Office
044-25734230
044-42034046

## MJF.Lion. G.VARADARAJAN REDDIAR

Lions Clubs International
Chairman
G.V.R. Groups - M/s G.V.R. Agencies
"G.V.R. Bhavan"
393, T.H. Road, Thiruvottiyur, Chennai- 600 019.

## Industrial Canteen Contractor

Canteen
**M/s. Carborandum Universal Ltd,**
Thiruvottiyur, Chennai - 600 019.

Canteen
**M/s. Royal Enfield India Ltd,**
Thiruvottiyur, Chennai - 600 019.

Canteen
**T.I Cycle of India,**
Ambattur, Chennai-600 058.

Canteen
**M/s. Esun Rerolls India Ltd,**
Hosur P.O.Krishnagiri Dt.

Canteen
**M/s. Esun MR Tap Changes,**
Thirunintravoor,P.O.,Thiruvalloor Dt.

Canteen
**M/s. Carborandum Universal Ltd,**
Sri Perumbudur P.O., Kancheepuram Dt.

# டேக்பான் நிகழ்வுகள்!

## திண்டிவனம்






24.09.2024 மதியம் 2.30 மணி முதல் கடலூர் ஸ்ரீ திவான் பகதூர் சுப்பராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் தென்னிந்திய ரெட்டி ஜன சங்கத்தின் பேரவைக் கூட்டம் தலைவர் கிளியனூர் திரு.கே.வி.முத்துமல்லா ரெட்டியார் தலைமையில், செயலர் திரு.எம்.இரவிச்சந்திரன் ரெட்டியார் முன்னிலையில், துணை தலைவர் திரு.எம்.வி.வைத்திலிங்க ரெட்டியார் சிறப்புரையுடன் நடைபெற்றது. கூட்டத்தில் புதுச்சேரி பிரதேச ரெட்டி நலச் சங்க தலைவர் திரு.இராமச்சந்திர ரெட்டியார் உள்பட பெருந்திரளான ரெட்டி சொந்தங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கூட்டத்தில் பேசிய செயற்குழு உறுப்பினர் திரு.ரகுபதி ரெட்டி, திண்டிவனத்தில் புதிதாய் திறக்கப்படவுள்ள பேருந்து நிலையதிற்கு உத்தமர் ஓபிஆர் பெயரைச் சூட்ட தமிழக அரசை தென்னிந்திய ரெட்டி ஜன சங்கம் வலியுறுத்த வேண்டும் என வலியுறுத்தினார். தலைவர் திரு.முத்துமல்லா ரெட்டியார் முன்மொழிய செயலர் திரு.இரவிசந்திர ரெட்டியார் வழி மொழிய திண்டிவனம் புதிய பேருந்து நிலையதிற்கு உத்தமர் ஓபிஆர் பெயரை சூட்ட தென்னிந்திய ரெட்டி ஜன சங்கத்தின் சார்பில் தமிழக அரசை வலியுறுத்தி அனைவரின் ஏகோபித்த ஆதரவுடன் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக அரசின் 2024 ஆம் ஆண்டிற்கான நல்லாசிரியர் விருது பெற்ற திண்டிவனம், ஜெயபுரத்தை சேர்ந்த கொள்ளார் திரு.ஆர்.பாபு ரெட்டியாரின் துணைவியாரும் திண்டிவனம் மாண்ட்போர்ட் மெட்ரிக் மேல் நிலை பள்ளியில் 30 ஆண்டுகளாக தமிழ் ஆசிரியையாக பணியாற்றும் திருமதி பி.தாட்சாயணி ரெட்டி, B.Lit, MA., B.Ed., M.Phil., அவர்கள், சங்க துணை தலைவர் புதுவை திரு.வைத்திலிங்க ரெட்டியாரால் சபையில் அறிமுகப்படுத்தப்பட்டு கௌரவிக்கப்பட்டார். செயற்குழு உறுப்பினர் திரு.ரகுபதி ரெட்டியார் பேசும் போது நம் இனத்தில் சிறப்பாக சேவையாற்றி நம் இனத்திற்கு பெருமை சேர்த்த திருமதி தாட்சாயணி ரெட்டி மிகுந்த போற்றுதலுக்கு உரியவர் என்று பாராட்டி பேசினார். தலைவர் திரு.முத்துமல்லா ரெட்டி பொன்னாடை போர்த்தி திருமதி தாட்சாயணி ரெட்டியை சிறப்பித்தார். செயலர் திரு.இரவிச்சந்திர ரெட்டி, கொள்ளார் திரு.பாபு ரெட்டியாருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

*With Best Compliments from*



## Ln T.V. Raj MJF

Vice president - Takepon Reddy Nala Sangam
Patron - Yogi Vemana Educational trust, Hosur
Distruict Chairperson - Lions Club
Secretary of Table Tennis Association,
Krishnagiri district

**No.3, Vidhya nagar, Hosur**
**Ph: 78068 03255**






# YOGI VEMANA MATRIC.HR.SEC.SCHOOL

8th K.M. Hosur - Bagalur Road,
Near Eluvapalli Bus Stop, Hosur, Krishnagiri Dt.



**Ln.G.Muni Reddy**
Chariman



**Ln.R.Srinivasa Reddy**
Secretary (Admin)



**G.KRISHNA REDDY**
Secretary (Active)



**N.PRAKASH REDDY**
Joint Secretary



**N.KRISHNA REDDY**
Treasure

Yogi Vemana Matriculation Hr Sec School was started in the year 2007 and is the unit of Yogi Vemana Educational and Welfare trust. The trust was ingrained by the Reddy community people of Hosu r and Denkanikotta Taluks. It was started with classes LKG TO VIII STD, but today we have classes till XII th STD .At present we do have strength of about 800 students. 700 students in matric stream and 100 students in CBSE STREAM.

Our main objective is to inculcate social moral ethical and spiritual values of education among students.we also aspire to nurture discipline, courage and excellence among our students.

I. To impart man making, character building education.

II. To bring out lalent, that is inherent in each child.

III. To build confidence and prepare the child to be multiple achiever

IV. To offer quality education to pupils of all communities without any discrimination at the least expenditure and without accepting any kind of donation from the parents. Proudly we are happy to say that we are producing 100°/o result in the Board Examination for the past 6 years.




# Sri Bhagavathy

## Traders Pvt Ltd.,



- Warehousing
- 3PL Service Providers
- Sales & Marketing

**Corporate Office:** P.V.Sreedharan Road,
Kumbalam PO., Cochin - 682506
0484 3083311, 98460 45205
info@sribhagavthy.com



*With best compliments*
*To grace the function sucess*

## Ln Dr Y.V.S. Reddy

Golden Jubilee social worker,
Adviser Takepon Reddy Nala Sangam

- Father of Hosur Lionism, projects: Adopted one Govt Hr sec school from 20 years now it is fully equipped modren co education school strength 1800 students.
- Developed one public walkers way 2 km with nearly one lakh trees with the support of Govt & public. project cost nearly 7crores.
- Developed Scouts & Guides training center in 5.5 acers at Hosur.
- Lions Eye Hospital free for all poor people in Hosur with the Support of club members & friends in one accer land.
- Project cost 4 crors other than land cost Nithya Annadasoha Bhavan at Anekal my kula dhaivam Thimmarayaswamy temple.
- project cost nearly 5crores with the support of trust & Devotees.
- Totall small projects from 52 years nearly 700 projects. Target 1000 projects in my life.

# HOTEL ARYAAS

## HIGH QUALITY PURE VEG.RESTAURANT

VILLIYANUR MAIN ROAD, REDDIYARPALAYAM, PUDUCHERRY – 605010.

ஆர்டரர்கள் எங்களிடம் குறித்த நேரத்தில்
டெலிவரி செய்யப்படும்

**PROP: T.REGUNATH**

**ALL PARTY ORDERS UNDERTAKEN WITH QUICK AND TIMELY DELIVERY.**





*With Best Compliments from*




# ஆதம்பாக்கம் ஜனோபகார சாஸ்வத நிதி லிமிடெட்

107/62, புதுப்பேட்டை தெரு, ஆலந்தூர்,
சென்னை - 600 016. தொலைபேசி : 044 - 2234 1794

---

# Adambakkam Janopakara Saswatha Nithi Limited

**107/62, Pudupet Street, Alandur,
Chennai - 600 016. Phone : 044 - 2234 1794**

**18.12.2006ல் பவழ விழா கண்ட நிறுவனம்**

**நேர்காணல்** | ★ செல்வ முத்துக்குமரன்

# காலநிலை மாற்றத்தால் புதிய புதிய நோய்கள் பரவிக் கொண்டிருக்கின்றன!

## டாக்டர் அசோக்குமார்

*டாக்டர் ஜே.அசோக் குமார் (M.B.B.S., M.S. General Surgery) சென்னை, கொரட்டூர், ரயில்வே ஸ்டேஷன் சாலையில் K.G.J. HOSPITALS என்ற மல்டி ஸ்பெஷாலிட்டி Multi Speciality மருத்துவமனையை நடத்தி வருகிறார். இவருடைய தந்தையார் பெயர் ஜானகிராமன் ரெட்டியார். அவருடைய தந்தையார் பெயர் கோவிந்த ரெட்டியார். அவருடைய தந்தையாரின் பெயர் குப்பு ரெட்டியார். ஆக தன்னுடைய மூன்று தலைமுறை மூதாதையர்களின் நினைவைப் போற்றும் வகையில், அவர்களின் முன்னெழுத்துகளையே தனது மருத்துவமனையின் பெயராக அமைத்து கொரட்டூர் பகுதியில் 'சிறந்த மருத்துவமனை' என்ற பொதுமக்களின் நல்வாழ்த்துகளோடு மருத்துவப் பணியில் ஈடுபட்டிருக்கும் டாக்டர் அசோக் குமார் அவர்களுடன் நமது 'ரெட்டி பண்பாடு' இதழின் சார்பாக உரையாடினோம்..*







**???: வணக்கம் டாக்டர் உங்கள் தாய் தந்தையர், பால்ய காலம், இளமைக்காலம் குறித்து சொல்லுங்களேன்?**

**!!!:** சென்னையின் புறநகர் பகுதிகள் பலவும் ஒரு காலத்தில் விவசாய கிராமங்களாக இருந்தன இந்த கொரட்டூர் கிராமமும் அப்படிதான் இங்கே தொன்று தொட்டு விவசாயம் செய்து வாழ்க்கை நடத்தி சந்ததியினரை வளர்த்த ஒரு விவசாய குடும்பம் என் தந்தையாரின் குடும்பம் அப்பாவின் ஜானகிராமன் ரெட்டியார் அவர் அப்பாவின் பெயர் கோவிந்த ரெட்டியார் அவருடைய அப்பாவின் பெயர் குப்பு ரெட்டியார் என் மூதாதையரின் நினைவை போற்றும் வகையிலே தான் என் மருத்துவமனைக்கு அவர்களுடைய பெயரை சூட்டி உள்ளேன். அப்பா சிறந்த விவசாயி அதோடு, இந்த கொரட்டூர் பகுதியில் அந்த

காலத்தில் ஒரு ரைஸ் வெல்லும் வைத்திருந்தார் அப்போதைய விவசாய கிராமங்களில் ரைஸ்மில் நடத்துவது என்பதே பெருமைக்குரிய கௌரவமான தொழிலாக இருந்தது. விவசாயமும் விவசாயம் சார்ந்த தொழிலான ரைஸ் மில்லும் நடத்தியதால் இந்த பகுதியில் எங்கள் குடும்பம் புகழ் பெற்று விளங்கியது. என்னுடைய சிறு வயதிலேயே அப்பாவின் ஆசை நான் படித்து மருத்துவராக வரவேண்டும் என்பது அப்பாவின் ஆசையே எனக்கும் சிறு வயது முதல் மருத்துவர் கனவை வளர்த்தது. அவர் எப்படி ஒரு சிறந்த விவசாயியாக விளங்கினாரோ அது போலவே நானும் ஒரு சிறந்த மருத்துவராக வர வேண்டும் என்ற லட்சியத்தை சிறுவயதிலேயே மேற்கொண்டேன். என்னுடைய கல்வி அதை நோக்கியே இருந்தது..



## உங்கள் தொடக்க கல்வி உயர்நிலைப் பள்ளிக்கூட கல்வி கல்லூரி கல்வி குறித்து கூறுங்கள்?

நான் முதலில் எல்கேஜி, யுகேஜி பயின்றது கொரட்டூரில்தான். அதன்பிறகு முதல் வகுப்பு கல்வி பயின்றது மாம்பலம் செயின்ட் வேளாங்கண்ணி பள்ளியில்.

அப்புறம் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளை நைட்டிங்கில் பள்ளியில் பயின்றேன். கோலார் தேவராஜ் அர்ஸ் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். பயின்றேன். பி.ஜி. ஜென்ரல் சர்ஜரியும் அங்குதான் பயின்றேன். அதன்பிறகு சென்னை பில்ரோத் மருத்துவமனையில் பணிபுரிந்தேன். சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் மீண்டும் கோலார் தேவராஜ் கல்லூரியில் எம்.எஸ். மேற்படிப்பு பயின்றேன். அதை முடித்துவிட்டு வந்து மீண்டும் பில்ரோத் மருத்துவமனையில் பணிபுரிந்தேன்.





## சொந்தமாக எப்போது மருத்துவமனை தொடங்கினீர்கள்?

எம்.எஸ். முடித்துவிட்டு மீண்டும் சில ஆண்டுகள் பில்ரோத் மருத்துவமனையில் பணிபுரிந்த பின் கொரட்டூர் பகுதியில் முதலில் சிறியதாக 24 ஹவர்ஸ் மருத்துவமனை தொடங்கினேன். அதன்பிறகு இந்த இடத்தில் அதாவது என்னுடைய சொந்த இடத்தில் மருத்துவ மனை கட்டிடங்கள் கட்டி கொஞ்சம் கொஞ்சமாக பல கட்ட வளர்ச்சியாக மருத்துவ வசதிகளை ஏற்படுத்தினேன். தற்போது கே.ஜி.ஜே என்னும் இந்த மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறேன்.

## ஒரு மருத்துவர் ஆக வேண்டும் என்ற ஆசை எப்படி உங்களுக்கு ஏற்பட்டது?

இதை என் ஆசை என்று சொல்வதை விட என் தாய் தந்தையரின் கனவு என்று சொல்லலாம். அம்மாவும் அப்பாவும் நான் நன்றாக படித்து கல்வியின் வழியாக உயர்வான வாழ்க்கையை அடைய வேண்டும் என்று நினைத்தார்கள். அதற்குக் காரணம் அப்பா ஒரு சிறந்த விவசாயியாக விளங்கினார். சொந்த நிலத்தில் சிறப்பாக விவசாயம் செய்தார். இதே பகுதியில் விவசாயம் சார்ந்த ரைஸ் மில் தொழிலும் நடத்தினார். நான் அவர்களுக்கு ஒரே குழந்தை. அதனால் சிறந்த கல்வியும் அதனால் ஒரு உயர்வான வாழ்க்கையும் எனக்கு அமைய வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

குறிப்பாக அப்பா எனது பள்ளிப் பருவத்திலேயே "நீ நன்றாக படித்து டாக்டராக வேண்டும் இப்போதிலிருந்து அந்தக் கனவை உன் மனதில் உறுதியாக வளர்த்துக் கொள்" என்று ஊக்கமூட்டினார்கள். அப்பா எனக்குள் விதைத்த மருத்துவர் என்னும் அந்தக் கனவு எனக்குள்

கொஞ்சம் கொஞ்சமாக வளரத் தொடங்கியது. அதை நோக்கியே என்னுடைய கல்வியை அமைத்துக் கொண்டேன். அப்பாவின் கனவைப் பின் தொடர்ந்து மருத்துவராக பயின்று ஒரு நல்ல மருத்துவமனையை உருவாக்கி நினைவாக்கி விட்டேன் என்ற நிறைவு எனக்கு இப்போது இருக்கிறது.

பெற்றோரின் கனவுகளை நிறைவேற்றித் தருபவர்களே சிறந்த பிள்ளைகள் என்பார்கள். அந்த வகையில் நான் என் தந்தையின் சிறந்த பிள்ளையாக இருக்கிறேன் என்று மகிழ்ச்சி அடைகிறேன். நான் பிறந்து வளர்ந்த இந்த கொரட்டூர் பகுதியில் என்னுடைய சொந்த இடத்தில் மருத்துவமனை கட்டி இங்குள்ள மக்கள் பயன்படும் வண்ணம் எனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டதை நான் பெருமிதமாக உணர்கிறேன்.

**உங்கள் குடும்பம் பற்றி சொல்லுங்கள்?**

எனக்கு 2001ல் திருமணம் ஆகியது 2003ல் குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை. என்னுடைய மருத்துவமனை நிர்வாகத்தை என் மனைவி கவனித்து வருகிறார் அதனால் என்னால் மருத்துவப் பணிகளில் மட்டும் நன்றாக கவனம் செலுத்த முடிகிறது. என்னுடைய ஒரே மகன் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் பயின்று வருகிறார். என்னைப் போலவே அவரையும் ஒரு சிறந்த மருத்துவராக உருவாக்க வேண்டும் என்பது எங்கள் கனவு. அதை நிறைவேற்றும் விதமாக தற்போது அவர் மருத்துவக் கல்வி பயின்று வருகிறார்.

**ஒரு ஒரு மருத்துவக் கல்லூரி மாணவராக நீங்கள் பயின்ற காலத்துக்கும் இன்றைய காலத்துக்கும் நோய்கள் குறித்த வேறுபாடுகள் என்ன என்று சொல்லுங்களேன்ஞ்**

மருத்துவக் கல்வி, மருத்துவமனைகள், அதிநவீன மருத்துவ சிகிச்சைகள் ஆகியவற்றில் இன்றைக்கு நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு மருத்துவத்துறை உலகெங்கும் வளர்ச்சி கண்டுள்ளது. அதாவது பொதுவாக ஒன்று சொல்வார்கள். ஒவ்வொரு முப்பது ஆண்டுக்கும் ஒரு முறை உலகின் எல்லா துறைகளிலும் வாழ்க்கை முறையிலும் மாற்றங்கள் நிகழும் என்று. ஆனால் அந்த 30 ஆண்டுகள் என்பது அடுத்து 10 ஆண்டுகள் ஆயிற்று. பத்து ஆண்டுகள் என்பது இப்போது ஐந்து ஆண்டுகள் மூன்று ஆண்டுகள் என்ற நிலை வந்துவிட்டது. அதாவது இன்றைய நவீன உலகம் வேக வேகமாக உருமாறிக் கொண்டே இருக்கிறது. நாம் நவீனம் என்று சொல்லக்கூடிய ஒன்றை கற்றுக் கொண்டிருக்கும் போதே அல்லது ஒரு நவீன கருவியை பயன்படுத்திக் கொண்டிருக்கும்போதே அடுத்த அப்டேட்டட் வெர்ஷன் வந்துவிடுகிறது.

ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன். 2000 ஆம் ஆண்டில் நான் லேப்ராஸ்கோபிக் பண்ணும் போது அது ஒரு சில டாக்டர்களுக்குதான் தெரியும். இப்போ அது பேசிக் நீட். எல்லாருக்குமே தெரிஞ்சிருக்கு. எல்லாருக்கும் தெரிந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கு. இதுபோல எல்லா துறையிலுமே நிறைய அறிவியல் முன்னேற்றங்கள். அல்ட்ரா சவுண்ட் அப்படிங்கறத வச்சி நிறைய நவீன சிகிச்சை முறைகள் வந்திருக்கிறது. ரோபோட்டிக் ட்ரீட்மென்ட் மாதிரி ஆச்சரியமான நவீன அறிவியல் மருத்துவ சிகிச்சை முறைகள் வந்து கொண்டே இருக்கின்றன. ஒரு புதிய முறை மருத்துவம் அமுலில் இருக்கும் போதே அதில் இருக்கும் குறைகளை சரி செய்து உடனடியாக அழுத்த வளர்ச்சி நிலை சிகிச்சை முறை வந்து விடுகிறது. கால மாற்றமும் வேகமாக வளரும் அறிவியலும் செய்யும் மாயாஜாலம் இது! தீர்க்க முடியாத பல நோய்களுக்கும் இன்றைக்கு நவீன சிகிச்சை முறைகள்.. புதிய புதிய மருந்துகள் வந்திருப்பது மனித குலத்திற்கு நன்மை பயக்கக் கூடியதுதான்!

**உங்கள் மருத்துவமனையில் இன்றைய மருத்துவத்துறையின் நவீன மருத்துவ சிகிச்சைகள் என்னவெல்லாம் இருக்கின்றன? எதிர்காலத்தில் எம்மாதிரி சிகிச்சைகளை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளீர்கள்?**

இதய அறுவை சிகிச்சை, நரம்பியல் தொடர்பான மூளை அறுவை சிகிச்சை தவிர எங்கள் மருத்துவமனையில் எல்லா நவீன மருத்துவ முறைகளும் இருக்கின்றன. எதிர்காலத் திட்டம் என்பதெல்லாம் ஒரு காலத்தில் இருந்தன. இப்போது இன்றைக்கு இருக்கும் ஒரு மருத்துவ சிகிச்சையில் நாளைக்கு புதிய மாற்றங்கள் முன்னேற்றங்கள் ஏற்படுகின்றன. தினம் தினமும் அப்டேட்டட் வெர்ஷன் எல்லாத் துறைகளிலுமே வந்து கொண்டிருக்கிறது என்பது நீங்கள் அறிந்ததுதான். அதனால் தினமும் நாம் நம்மை புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான் இன்றைய எதிர்காலம் திட்டம்

என்பது! அந்த வகையில் மருத்துவத்துறையில் அறிமுகமாகும் புதிய சிகிச்சை முறைகளை எங்கள் மருத்துவமனையில் அறிமுகப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

**இந்த மருத்துவமனையை தொடங்கியதில் இருந்து இன்றுவரை உங்கள் மருத்துவர் வாழ்வில் நடந்த, மறக்க முடியாத சம்பவங்கள் அல்லது ஒரு சம்பவம் குறித்து கூற முடியுமா?**

ஒரு மருத்துவருக்கு ஒவ்வொரு நாளுமே புதிய அனுபவங்கள் புதிய சவால்கள்தான்! அந்த வகையில் இந்த மருத்துவமனையை தொடங்கிய தருணமே இன்னும் ஒரு மறக்க முடியாத சம்பவமாக நினைவில் இருக்கிறது.. ஏனெனில் 2019ல் கொரோனா முதல் அலை வந்த போதுதான் இந்த மருத்துவமனையை திறப்பதற்குத் திட்டமிட்டிருந்தோம். அப்போது இயலவில்லை. ஆனால் 2020ல் இரண்டாம் அலை வந்து கொரோனா தாக்கம் மேலும் அபாயகரமானதாக மாறத் தொடங்கிய போது நோயாளிகளே எங்கள் மருத்துவமனையை தேடி வந்து குவிந்து விட்டனர். அதனால் உடனடியாக எந்த சம்பிரதாயமும் இன்றி மருத்துவமனையை திறந்து கொரோனா நோயாளி களுக்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினோம்!

சுமார் 600 – 700 கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து உயிர் பிழைக்கச் செய்தோம்! மருத்துவமனை தொடங்கியவுடனே ஏற்பட்ட இந்த அனுபவம் மறக்க முடியாததுதானே! அது முதலாக இந்தப் பகுதியில் எங்கள் மருத்துவமனைக்கு ஒரு நல்ல பெயர் உருவானது! அதை இன்று வரை காப்பாற்றி மேலும் புதிய மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறோம்!

**ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு துறையிலும் கல்வி பயின்று உரிய பணிக்கு வருவது வரை பெற்றோர், குடும்பத்தார் ஆதரவும் உறுதுணையும் மிகவும் அவசியம். அதேபோல் குடும்பத்தினர் இல்லாமல் ஒவ்வொருவர் வாழ்விலும் வேறு சிலரும் முக்கியமான இன்ஸ்பிரேஷனாகவும் உதவி செய்தவர்களாகவும் மறக்க முடியாத மனிதர்களாக இருப்பார்கள். உங்கள் வாழ்வில் அப்படி யாரேனும் மறக்க முடியாத மனிதர்கள் உண்டா?**

ஆம்! உண்டு! நான் மேற்கு மாம்பலம் வேளாங்கண்ணி பள்ளியில் பயிலும் போது அங்கு



ஒரு ஹாஸ்டலில் தங்கிப் படித்தேன். அதை நிர்வாகித்தவர் பெயர் ராதா அம்மாள். அவர்கள் விடுதியில் தங்கிய ஒரு மாணவனாக என்னை பாவிக்கவில்லை. தங்களின் சொந்த மகனைப் போலவே நினைத்து என் உடல் நலனில் அக்கறை கொண்டு என்னை கவனித்துக் கொண்டார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் ராதா அம்மாவை என் இரண்டாவது தாய் என்றே சொல்வேன்! அவர்கள் என்னிடம் செலுத்திய தாயன்பை என்றும் நான் மறக்க மாட்டேன்!

**உங்கள் மருத்துவமனையில் அண்மையில் அறிமுகப்படுத்திய புதிய சிகிச்சை முறைகள் பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?**

புதிய சிகிச்சை முறை என்பதை விட நாங்கள் வயது முதிர்ந்தவர்களுக்காக ஏற்படுத்தியுள்ள ஒரு முதியோர் காப்பகம் குறித்து சொல்கிறேன். இந்த சீனியர் கேர் ஹோம் எங்கள் மருத்துவமனை வளாகத்திலேயே அமைத்துள்ளோம். குடும்பத்தால் பராமரிக்க முடியாத முதியோர்கள், ஒரு சில நாட்களுக்கோ சில மாதங்களுக்கோ பிள்ளைகள் வெளியூர் அல்லது வெளிநாடு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் நேர்கிற போது முதியோர்கள் அவர்களோடு பயணிக்க முடியாத சூழல் இருக்கும்! அப்படிப்பட்ட முதியோர்களை எங்கள் மருத்துவமனை வளாகத்திலேயே ஏற்படுத்தி உள்ள முதியோர் இல்லத்தில் தங்க வைத்து பராமரிக்கிறோம். தேவைப்படும் அவசர மருத்துவ சிகிச்சைகள் உடனுக்குடன் செய்து தருகிறோம்.

இன்றைய சூழலில் இளையோர்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட நவீன மாற்றங்களில் முதியோர் பராமரிப்புதான் முக்கியமான பிரச்சினை

யாக இருக்கிறது! அதனால் மருத்துவ வசதியுடன் கூடிய முதியோர் இல்லத்தை நாங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம்! இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது! இதை மேலும் விரிவுபடுத்த உள்ளோம்.

**ஆதி மனிதனுக்கு நோய்கள் பெரும் சவாலாக இருந்தன. இயற்கையின் துணை கொண்டு மட்டுமே அவன் நோய்களை எதிர்கொண்டான். அசுர வேகத்தில் அறிவியல் வளர்ச்சி பெறும் இந்தக் காலத்தில் பல ஆச்சரியமான நவீன மருத்துவ கருவிகள், சிகிச்சை முறைகள் தினம் தினம் வந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் அதே வேகத்தில் புதிது புதிதாக பல்வேறு நோய்களும் பரவிக் கொண்டே இருக்கின்றன. உதாரணமாக சமீபத்தில் வந்து உலகத்தையே கலக்கி விட்டுப் போன கொரோனா! இதற்கு என்ன காரணம்? இதை நாம் அன்றாட வாழ்வில் எப்படி எதிர்கொள்வது?**

பொதுவாக நோய்களை நாங்கள் இரண்டு விதமாக பிரித்துக் கொள்வோம். அவை: communicable disease, un communicable disease.

ஃப்ளூ, டெங்கு, மலேரியா ஏன் கொரோனா கூட கம்யூனிகேபிள் டிசீஸ்தான். இதய நோயாளிகள், கேன்சர், ஆஸ்த்மா, சர்க்கரை, உயர் ரத்த அழுத்தம் போன்றவை அன் கம்யூனிகேபிள் டிசீஸ் ஆகும். நீங்கள் இயற்கையை எதிர்கொண்டு மனிதன் வாழ்ந்தான் என்று சொன்னீர்களே, நோயும் இயற்கைதான்! மனிதன் தோன்றிய காலம் தொட்டு நோய்களும் தொடர்ந்து வருகின்றன என்பதை நாம் அறிவோம். அதற்குரிய சிகிச்சையும் இயற்கைதான் என்று ஒரு காலத்தில் இருந்தன. இயற்கை மாசு, சுற்றுச்சூழல் சீர்கேடு போன்றவைகளால்தான் இன்றைக்கு புதிய நோய்கள் உருவாகி பரவுகின்றன.

உதாரணமாக மழைக் காலங்களில் பனிக் காலங்களில் சளி தொடர்பான, சுவாசம் தொடர்பான சில குளிர் ஜுரங்கள் ஆண்டு தோறும் அந்தப் பருவ காலங்களில் வரும். அந்தப் பருவ காலங்கள் முடிந்த உடனே போய்விடும். ஆனால் பாருங்கள்ஞ் இதோ கோடைக் காலம் தொடங்கிவிட்டது. இந்த தருணத்தில் மழைக்கால நோய்களும் பனிக்கால நோய்களும் தொடர்கின்றன!

சளி, சுவாசம் தொடர்புடைய நோயாளிகள் இப்போதும் எங்கள் மருத்துவமனைக்கு வருவதைப் பார்க்கிறேன். காரணம் பருவநிலை மாற்றம் என்னும் காலநிலை மாற்றத்தால் மனிதன் பல புதிய நோய்களை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அன்றாட வாழ்வும் பதற்றம் நிறைந்ததாக வேகம் வேகமாக ஓடும் விதமாக இருப்பதால் பதட்டத்தால் ஏற்படும் உயர் ரத்த அழுத்தம் போன்ற நோய்களும் அது தொடர்புடைய சர்க்கரை நோய்கள், இதய நோய்கள் ஆகியவும் இன்றைய தலைமுறை மனிதர்களை இளமைப் பருவத்திலேயே தாக்குகின்றன.

இந்த நோய்கள் அதிகரிக்கும் போது உடலின் பலவீனம், சக்தி இழப்பு ஆகிய குறைபாடுகள் மனரீதியான நரம்பியல் தொடர்பான குறைபாடுகளையும் ஏற்படுத்துகின்றன. இத்தகைய நோய்க் குறைபாடு கள் நம்மை அண்டாமல் இருக்க அன்றாட வாழ்வில் சில ஆரோக்கிய பழக்க வழக்கங்களை கடைப்பிடித்தல் நல்லது.

உதாரணமாக கூட்டம் கூடும் இடங்களில் பயணிக்கும் போது முக உறை அணிந்து கொள்ளலாம். உணவகங்களில் சாப்பிடும் போது நன்றாக கை கழுவுவதும் வெளியிடங்களில் தண்ணீர் அருந்தும் போது எச்சரிக்கையாக இருப்பதும் மிகவும் அவசியம்! இவை எல்லாவற்றையும் கடந்து இன்றைய வாழ்க்கை முறை கருவிகள் சார்ந்து அமைந்துவிட்டன. கம்ப்யூட்டர், லேப்டாப், செல்போன் போன்றவைகளின் பயன்பாடும் சமூக ஊடகங்களும் நம்முடைய வாழ்வின் பெரும்பாலான நேரங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றால் எதிர்காலத்தில் கண் குறைபாடு காது கேட்கும் குறைபாடு தொடர்புடைய நோய்கள் உருவாகும் என்று மருத்துவ அறிவியலாளர்கள் எச்சரித்துக் கொண்டே இருக்கின்றனர்!

குறிப்பாக இளைஞர்கள் அடிமைப்பட்டு கிடக்கும் சமூக ஊடகங்களில் இருந்து வெளிவர வேண்டும். நல்ல உணவு, உரிய ஓய்வு சரியான உறக்கம் என்பதை தீவிரமாக மனதில் கொண்டு தினசரி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்! நம்முடைய முன்னோர்கள் உணவு குறித்தும் மருந்து குறித்தும் அருமையாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

'உணவே மருந்து மருந்தே உணவு', நோய் வரும் முன் காப்போம் போன்றவைகளை தினசரி வாழ்வில் கடைபிடித்தால் புதிது புதிதாக பரவும் நோய்களிலிருந்து தப்பிக்க முடியும்! ■

# டேக்பான் நிகழ்வுகள்!

## திண்டிவனம்




திண்டிவனத்தில் யுகாதி திருநாள் விழா ஆர்யாஸ் கார்டன் ஹாலில் ஆர்யாஸ் அதிபர் திரு.இராமகிருஷ்ணா ரெட்டி ஏற்பாட்டில் 9.4.2024 மாலை 4 மணிக்கு கொண்டாடபட்டது. நம் சொந்தங்கள் பலரும் வாழ்த்தி பேசினர். திண்டிவனம் வட்டாரத்தில் தெலுங்கு மொழியை கற்று கொடுப்பதன் அவசியத்தை பாலப்பட்டு ஆர்கே நர்சரி உரிமையாளர் திரு.இராம்குமார் ரெட்டி வலியுறுத்தி பேசினார். நான் பேசும் போது திருவண்ணாமலை பண்டரெட்டி சங்கத்தில் திரு.வீரமணி ரெட்டியார் ஏற்பாட்டின் படி தெலுங்கு மொழி கற்றுவித்தல் வகுப்பு நடத்துவது போல திண்டிவனத்திலும் நடத்தி தெலுங்கு மொழியை பேச எழுத படிக்க வகுப்பு நடத்த நடவடிக்கை எடுக்க அனைவர் சார்பிலும் ஆர்யாஸ் அதிபரிடம் வழக்கறிஞர் கிருபாகரன் கேட்டுக்கொண்டார்.

மேலும் நம் ரெட்டி சமுதாயம் பிறருக்கு வழங்கியும் வாழ வைத்துமே பழக்கபட்டவர்கள். உத்தமர் ஓபிஆர் தன் சொத்துக்களை எல்லாம் டிரஸ்ட் ஏற்படுத்தி இச்சமுதாயம் மேன்மையுற தானமளித்து இன்றளவும் இலட்சக்கணக்கானோர் பயன்பெறுவதையும் அவர் வழியை பின்பற்றும் நம் சமுதாயத்தை பற்றியும், குறிப்பாக திருநெல்வேலி ரெட்டியாரை பற்றியும் சமீபத்தில் யூடியூபர் ஒருவர் நம் சமுதாயத்தை அவதூறாக பொதுவில் பேசியது மலையை பார்த்து நாய் குரைப்பதற்கு சமம் என்றும் ஆர்யாஸ் அதிபர் திண்டிவனத்திற்கு அருகில், பாஞ்சாலம் கிராமத்தில் அமைந்துள்ள குளூனி எய்ட்ஸ் ஹோமுக்கு ஆண்டுகணக்கில் தினமும் இர்வு உணவை சுமார் 70 பேருக்கு தானம் வழங்கி வருவதையும் பாராட்டியதோடு நம் சமுதாயம் முன்னேற பொருளாதார ரீதியில் பின் தங்கியுள்ள குடும்பங்களில் கல்வி வேலை வாய்ப்பில் கஷ்டபடும் இளைஞர்களை உதவி செய்து ஊக்குவித்து முன்னுக்கு கொண்டுவர தேவையான உதவிகளை செய்ய நாம் முன்வர வேண்டும் என்று வழக்கறிஞர் கிருபாகரன் பேசினார்.

டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலச் சங்கம் EWS சான்றுக்காக சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி வெற்றி பெற்று தந்து இன்றளவும் நம் சொந்தங்கள் பயன்பெறுவதையும், வரும் காலங்களில் யுகாதி திருநாளை குடும்ப விழாவாக குதூகலமாக கலை நிகழ்ச்சிகளோடு நடத்தவும் கிருபாகரன் வலியுறுத்தினார். கூட்டத்திற்கு வந்திருந்த ஒரு சகோதரி தான் திருப்பதியில் பிறந்து வளர்ந்ததாகவும் தெலுங்கு மொழி எழுத படிக்க தெரியும் என்றும் தான் முன்னின்று நம் சமூதாய மக்களுக்கு கற்றுகொடுக்க முன் வந்ததை அனைவர் பாராட்டையும் பெற்றுள்ளது. ஏற்புரையாற்றிய ஆர்யாஸ் அதிபர் திரு.இராமகிருஷ்ண ரெட்டியார் நம் சமுதாய ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்க தயார் என்றும் தெலுங்கு மொழி கற்றுவித்தல் வகுப்பை நடத்துவது குறித்து 10 தினங்களில் நல்ல முடிவை தெரிவிப்பதாகவும் உறுதியளித்தார். ஒருங்கிணைந்து செயலாற்றுவதன் அவசியத்தை வலியுறுத்தி மகளிர் பேசியதை வெகுவாக பாராட்டினார். சிற்றுண்டி விருந்தோம்பலுடன் விழா இனிதே நடந்தேறியது.


ROJA BRAND
APRIL ஏப்ரல் 2024





# டேக்பான் நிகழ்வுகள்!

## திருநெல்வேலி



தமிழ்நாடு ரெட்டி சங்கம் ஸ்ரீ சக்தி மருத்துவமனை திருநெல்வேலியுடன் இணைந்து 9.2.2025 அன்று திருநெல்வேலியில் MDT இந்து கல்வி நிறுவனங்களின் தலைவராக பதவியேற்ற திரு.சுரேஷ் ரெட்டியார் அவர்களுக்கு பாராட்டு விழாவை நடத்தியது. தமிழ்நாடு ரெட்டிஜன சங்கத்தின் தலைவர் திரு. ஜெயராமன் ரெட்டியார், டேக்பான் செயல்தலைவர் விளாத்திகுளம் திரு.ஆர்.வி.செல்வகுமார் ரெட்டி, டேக்பான் ரெட்டி சங்கத்தின் தலைவர் வழக்கறிஞர் திரு.எம்.வி.வைத்தியலிங்க ரெட்டி, டேக்பான் ரெட்டி சங்கத்தின் செயலாளர் வக்கீல் கிருபாகரன் ரெட்டி, டேக்பான் ஆலோசகர் மதுரை பட்டாபிராமரெட்டி, திருவண்ணாமலை டேக்பான் துணைத்தலைவர் திரு.வீரமணி ரெட்டி, மூத்த தலைவர்கள் திரு.வழக்கறிஞர் சங்கர் ரெட்டி, டேக்பான் கவுன்சில் தலைவர் நெல்லை டாக்டர் வெங்கடேஷ் பாபு ரெட்டி, திரு.பாரத் ரெட்டி, வழக்கறிஞர் குமரேஷ் மற்றும் ஏராளமான ரெட்டி தலைவர்கள் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டு பாராட்டினர். MDT இந்து நிறுவனம் 150 ஆண்டுகள் பழமையான கல்வி நிறுவனம் மற்றும் தேசபக்தர்கள் மகாகவி பாரதி, வ.உ.சி. இந்த பள்ளியில் படித்தவர்கள். மகாகவி பாரதி மற்றும் வ.உ.சி. பயின்ற MDT இந்து பள்ளியின் வகுப்பறையில் சில நிமிடங்கள் பிரதிநிதிகள் சென்று அமர்ந்தனர்.



# டேக்பான் நிகழ்வுகள்!

## திருநெல்வேலி



மரம் நடுவோம் மழை பெறுவோம் என்ற தாரக மந்திரத்திற்கேற்ப பசுமை புரட்சியை ஏற்படுத்தி வரும் நம் சொந்தம் திண்டிவனம் வட்டம், பாலப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு.ஆர்.ராம்குமார் ரெட்டியின் தவ புதல்வர்கள் குமரன் மற்றும் லட்சுமணன் ஆகியோர் கராத்தே கலையை திறம்பட கற்று பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பரிசு கோப்பைகளையும் மெடல்களையும் பெற்று சாதனை படைத்துள்ளதை அறிந்து நம் ரெட்டி சொந்தங்கள் ஆர்யாஸ் அதிபர் திரு.இராமகிருஷ்ண ரெட்டியார் மற்றும் வழக்கறிஞர் கிருபாகரன் ரெட்டியுடன் சென்று வாழ்த்தினர். திரு.இராமகிருஷ்ண ரெட்டி பிள்ளைகளை வாழ்த்தி ஊக்கப்பரிசும் வழங்கி கௌரவித்தார்.




**பண்டரெட்டியார் திருவண்ணாமலை புதிய நிர்வாகிகள்:** தலைவர் உயர்திரு.எஸ்.வெங்கடாஜலபதி அண்ணன் அவர்கள், செயலாளர் உயர்திரு.எஸ்.குணசீலன் ரெட்டி அண்ணன் அவர்கள், பொருளாளர் உயர்திரு.கே.சேகர் ரெட்டி அண்ணன் அவர்கள் மற்றும் புதிய நிர்வாகிகள் அனைவருக்கும் திருவண்ணாமலை ரெட்டி திருமண மஹால் நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி சார்பாக வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# டேக்பான் நிகழ்வுகள்!

## திண்டிவனம்



23.06.2024 காலை 9.30 மணிக்கு மேல் புதுச்சேரி – திண்டிவனம் சாலையில் திருச்சிற்றம்பலம் கூட்டுரோடில் அமைந்துள்ள Grand Serenaa hotel & resortsல் விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கிளியனூரில் வசித்து வரும் புகழ்பெற்ற கே.எஸ்.வி. குடும்பத்தைச் சேர்ந்த, கடலூர் தென்னிந்திய ரெட்டி ஜன சங்க தலைவர் பெருமைக்கும் பெரு மரியாதைக்கும் உரிய திரு.கே.வி. முத்துமல்லா ரெட்டியார் – திருமதி எம்.ஹேமா ரெட்டி சதாபிஷேக விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. திண்டிவனத்தில் இருந்து ஆர்யாஸ் இராமகிருஷ்ண ரெட்டி உள்பட திரளான சொந்தங்கள் கலந்து கொண்டு ஆயிரம் பிறைகண்டவரிடம் ஆசிபெற்றனர்.



உ
வைரவசாமி துணை







# R.வையப்ப ரெட்டியார் ஏஜென்ஸி

## மரக்கரி வியாபாரம்

- R.V.சாந்தி லாரி சர்வீஸ்
- R.V.சாந்தி டிப்பர் சர்வீஸ்
- R.V.சாந்தி எர்த் மூவர்ஸ்
- R.V.சாந்தி ப்யூல்ஸ்

விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம்





R.V.வையனன் 95855 33165

R.V.செல்வக்குமார் 98421 44165

R.V.ராதாகிருஷ்ணன் 94431 34138

# Standard Associates

174, Kamaraj Salai, Saram, Pondicherry - 605 013.
E-mail : standardassociatespondy@gmail.com | Phone : 0413-2241134
Fax : 0413-2241297



Parryware Guru BATH FITTINGS Jaquar


ஆர்.எஸ்.ஆர்.ரெசிடென்சி
RSR RESIDENCY
RSR Residency
A Business Class Hotel @ Sivakasi
55 Well furnished room
AC & Non AC Rooms
Executive & Suite Rooms
Complimentory breakfast
Centralised A/C
Balcony in all AC rooms
Kanira கனிரா
Multicusion Family Restaurant
உயர்தர சைவ & அசைவ உணவகம்
Exclusive OFFERS for Group Booking Party Orders
South Indian North Indian Chinese Tandoori Chats
Rudra ருத்ரா
Hi-Tech Conference Hall
Ideal for Business Meetings, Conferences and Family Functions
Equipped with Hitech Facilities and Ample seating capacity
Dhara தாரா
Premim Lounge Bar
419-A, Near Bus Stand, Sattur Road, SIVAKASI.
Ph: 04562 278299 278499, 278599, 275499
for Booking: +91 94427 37189 +91 94428 37189
www.rsrresidency.com
booking@rsrresidency.com


RSR INTERNATIONAL SCHOOL (CBSE)
SYMBOL OF SUCCESS
R.S.R
INTERNATIONAL SCHOOL
SENIOR SECONDARY
SIVAKASI
9677 807 125
9677 817 125
Website :-
www.rsrinternationalschool.com
www.rsrinternatinalschool.org
Email :-
rsr.int.cbseschool@gmail.com
ADMISSION FOR CLASSES IX & XI FOR ACADEMIC YEAR
AFFILIATED TO CBSE, NEW DELHI
AFFILIATION NO.: 1931442
ADMISSION GOING FOR CLASSES PRE KG TO VIII FOR ACADEMIC YEAR


New born
Best of everything a Baby needs
63, mission st,
Pondicherry-1
ph : 0413-2346389
36, Sringeri madam st,
100 ft road,
Pondicherry-13
ph : 0413-2205659

# QUALITY ENTERPRISES

269, Kamaraj Salai, Puducherry - 605 013.

✆ : 2241928, 2241638, 9894645668/5

e mail : qualitypuducherry@gmail.com

**Distributor :**

Jain Pipes ™

Jain Drip ™

Jain Plumbing ™
Install peace of Mind!

Jain Column Pipe
Your Lifeline to Prosperity.



KSB
Domestic Pump

QUALITY ARCADE
TILES & SANITARYWARE

No. 202, E.C.R. Road, Kokku Park Signal, Thattanchavady,
Puducherry - 8. E-mail: qualityarcade@gmail.com
Ph: 2244949, Mob. 98946 45660.

Kajaria
TRANSFORM YOUR WORLD

Kerovit

## MARUTHI SENIOR SECONDARY SCHOOL
## LAWSPET, PUDUCHERRY – 605 008
## A Unit of Maruthi Charitable and Educational Trust
## Affiliated to CBSE (2930027)

**Maruthi Charitable and Educational Trust** was established in the year 2000. Since then the trust was helping school children for preparing competitive examinations seeking admissions to various reputed national Institution, such as IIT, NIT, JIPMER, AIIMS, IISc, NISER, BITS etc., over this 22-years the trust has seen enormous number of students entering into such Institutions.


Since 2002 the Trust is running a school , at present it is under the name of Maruthi Senior Secondary School and affiliated to CBSE, with classes from LKG to XII Std.

The Trust also gives coaching for Students preparing for NEET and JEE.

Contact number : 0413 2199198 , 87549 22449


Email : maruthicbsc2020@gmail.com

Website: maruthischool2002.org


YOGI RAM INN
28,A.L.C. CAMPUS
Cuddalore.Ph (04142)220652,220653

# டேக்பான் நிகழ்வுகள்!

## திருநெல்வேலி







திருநெல்வேலி சக்தி மருத்துவமனை டாக்டர் திரு.வெங்கடேஷ் பாபு – டாக்டர் சுமதி அவர்கள் இல்ல வரவேற்பு நிகழ்ச்சியில் டேக்பான் (ஆறு மாநில) ரெட்டிசங்க டேக்பான் தலைவர் திரு.வைத்தியலிங்க ரெட்டியார் மற்றும் அவர்கள் துணைவியார், தூத்துக்குடி டேக்பான் பி.கணேசன், பாஜக தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளரும், நேருயுவகேந்திராவின் தூத்துக்குடி மாவட்ட ஆலோசகர் திருமதி.எல்.அமுதா கணேசன், புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.சிவசங்கரன் அவர்கள், தெலுங்கு சம்மேளனத்தின் தலைவர் ஜி.கே.ரெட்டி அவர்கள், மதுரை திரு.பட்டாபிராமன் ரெட்டியார் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தி விழாவினை சிறப்பித்தனர்.

# டேக்பான் நிகழ்வுகள்!

## சென்னை




01.07.2024 அன்று மருத்துவர் தினத்தை முன்னிட்டு நமது சொந்தம் கோவை கே.டி.வி.ஆர். மருத்துவமனையின் இயக்குனர் டாக்டர் கே.டி.வி. ஆர்.ஜனார்த்தனன் அவர்களுக்கு இன்று தமிழக அரசால் சிறந்த மருத்துவர் என்ற விருது மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களால் சென்னையில் வழங்கப்பட்டது. டாக்டர் அவர்களுக்கு நமது டேக்பான் சங்கம் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.



ஆறு மாநில ரெட்டி சங்க பொதுச் செயலாளரும், வழக்கறிஞருமான விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தைச் சேர்ந்த ஜி.கிருபாகரன் ரெட்டி – கோமதி தம்பதியரின் மகள் டாக்டர் லாவண்யா – டாக்டர் அஜித்குமார் திருமணம் 17.11.2024 அன்று தென்காசி மாவட்டம், இலஞ்சியில் நடைபெற்றது.

# டேக்பான் நிகழ்வுகள்!

## புதுச்சேரி







நமது சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய 76 மாணவர்களுக்கு கல்வி ஊக்க உதவித்தொகை ரூபாய் 5,20,000 27–7–24 அன்று மாலை 4.00 மணி அளவில் புதுச்சேரி ஜெயராம் திருமண நிலையத்தில் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தலைவர் திரு.வி.ராமச்சந்திரரெட்டி அவர்கள் தலைமையில் துணைத்தலைவர் திரு.எம்.வி.வைத்திலிங்கம்ரெட்டி, பொருளாளர் திரு.ஜி.ராமமூர்த்திரெட்டி நன்கொடையாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாணவச் செல்வங்கள், பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# நீங்கள் சர்க்கரை நோயாளியா?

## சர்க்கரை நோய்க்கு ஒருங்கிணைந்த ஆங்கில மருத்துவ சிகிச்சை (Integrated) ஈஸ்ட் கோஸ்ட் சர்க்கரை நோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்



## ஸ்ரீ வித்யா குரூப் மருத்துவமனைகள்
## பாண்டிச்சேரி சர்க்கரை நோய் மையம்

எண்.4, 4வது குறுக்கு, அண்ணா நகர், பாண்டிச்சேரி,
போன் : 0413-2204647 செல் : 9487562930

**எங்கள் சேவை (Our Services)**



1. கருவரையில் உருவாகி கடைசி வரை நீடிக்கும் சர்க்கரை நோய்க்கான முழுமையான பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள் பிரிவு (Total Diabetics Checkup & Consulting) ஒவ்வொரு நோயாளிக்கும் நோயறிவு கல்வி பயிற்சி, உணவு முறை ஆலோசகர் (Diabetes Dieticians & Educators) சர்க்கரை நோய் கல்வியாளர்கள் கம்ப்யூட்டர் ஒலி, ஒளி அமைப்புகளின் உதவியோடு பயிற்சி அளிக்கப்படுகிறது.
2. பாதம் பாதுகாப்பு ஆலோசனை மற்றும் பரிசோதனை பிரிவு (Foot Care Centre)
3. இதயம், சிறுநீரகம், கண்கள் பரிசோதனைகள் மூன்று மாத சர்க்கரை அளவு (HBA1c) அறிய சிறப்பு பரிசோதனை.
4. நோயாளிகள் மற்றும் குடும்பத்தினர்கள் பயன்பெற சர்க்கரை நோய் மாதாந்திர இலவச பயிற்சி முகாம்கள் (பிரதிமாதம் தோறும் இரண்டாவது சனிக்கிழமை பாண்டிச்சேரி அருகில்)
5. சர்க்கரை நோய் குடும்பத்தினர் படிக்க, பயன்பெற பயிற்சி பெற Dr.G. சந்தானம் எழுதிய "சர்க்கரை நோய் உணவுமுறை சிகிச்சை" நூல்.
6. உடல் மனவள பயிற்சி பிரிவு யோகாசனம், சகஜயோக தியானம் செயல்முறை பயிற்சிகள்
7. சர்க்கரை நோய் சந்ததியினருக்கு நோய் வருமுன் காக்க, வந்தபின் நோயின் தீய விளைவுகளான ஹார்ட் அட்டாக், கை, கால் பக்கவாதம், சிறுநீரக பாதிப்பு, கால்கள் பாதிப்பு, கண் பாதிப்புகள் இவற்றில் இருந்து தப்பிக்க எங்கள் சேவைகளை பயன்படுத்தி நலம் பெறுவீர்.
8. சர்க்கரை நோய் பற்றி விளக்கம் அறிய டயாபடிஸ் டயல் சர்வீஸ் போன் : 04364 - 222930. செல் : 94431 62930
9. டயாபடிஸ் ஸ்டோர் - மருந்துகள், ஈவோசோல் காலணிகள், உணவுமுறை கண்காட்சி, பரிசோதனை கருவிகள்.

## SRI VIDYA HOSPITAL

**East Coast Diabetic Treatment and Research Centre**

### சர்க்கரை நோய்க்கென்றே இயங்கி வரும் முழுநேரக் கிளைகள்

**சென்னை கோயம்பேடு சர்க்கரை நோய் மையம்**
பார்வை நேரம் - முதல் வாரம்
ஞாயிற்றுக்கிழமை **By Appointment**
எண்.100, முதல் தெரு, அவ்வை திரு நகர்,
கோயம்பேடு, கோயம்பேடு மார்க்கெட்
பின்புறம், சென்னை - 92.
செல் : 9443162930/ 9790072202

**மயிலாடுதுறை சர்க்கரை நோய் மையம்**
14, கச்சேரி ரோடு,
மயிலாடுதுறை - 609 001.
தொலைபேசி - (04264) 222930
கைபேசி - 94431 62930

**Towards Excellence & Diabetes Care to the Rural Mass**

**Dr. S. கோபிநாத்,** M.D., (Neuro endo), DNB, MHSC (Diab)
**Dr. G. சந்தானம்,** M.B.B.S., DD., D.Diab (AVS), Phd(Diab)
**Dr. G. வரலெட்சுமி,** M.B.B.S., DGO, Fellow, Adv USG, CINF

# டேக்பான் நிகழ்வுகள்!

## சென்னை



Extraordinary occasion Linguistic Minorities leader, Prof CMK Reddy Sharing the Dias with 4 Governors, Sri RN Ravi (present), Sri C Rangarajan, Sri N÷òòòK Narayanan & Sri PS Ramamohan Rao (past) in a Book Release function in Raj Bhavan on 29/06/24.



சென்னை, ஒபிஆர் பட்டாபி ரெட்டியாருக்கு வயது 86 முடிந்து 87 துவங்குகிறது. அயராத உழைப்பு. ஒபிஆர் மீதும் ரெட்டி இனத்தின் மீதும் அளவற்ற பற்று. போக நாடு ரெட்டி நலச் சங்கம், டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலச் சங்கங்களுக்கு இவருடைய தன்னலமற்ற சேவை அளவிட முடியாதது. இன்னும் பல்லாண்டு காலம் நல் ஆரோக்கியதோடும் அனைவரின் அரவணைப்போடும் வாழ்ந்து நம் இனத்திற்கு மென்மேலும் சேவை ஆற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பிரார்த்திப்போம்.

# DHANALAKSHMI SRINIVASAN
## GROUP OF INSTITUTIONS

Perambalur / Trichy / Chennai / Coimbatore

Perambalur - 621 212, TamilNadu. Tel : 04328 220555,291255, 220554 / Email : dsgroups 1994@gmail.com

Medical / Engineering / Management Studies / Science & Humanity / Polytechnic / Nursing / Education / Teacher Training / Junior College



## WANT TO GO FURTHER ?

a degree course at Dhanalakshmi Srinivasan Group can take you far. We're ranked among the top ten in South India for Engineering, Science & Humanities

## DHANALAKSHMI SRINIVASAN
## Medical College & Hospital, Siruvachur, Perambalur



**Dhanalakshmi Srinivasan Engineering College, (Perambalur)**
**Srinivasan Engineering College, (Perambalur)**
**Dhanalakshmi Srinivasan College of Engg & Tech, (Chennai)**
**Dhanalakshmi Srinivasan College of Engineering, (Coimbatore)**
**Dhanalakshmi Srinivasan College of Engineering, (Perambalur)**
**Dhanalakshmi Srinivasan Institute of Technology, ( Samayapuram,Trichy)**
**Dhanalakshmi Srinivasan Institute of Research & Technology (Perambalur)**

Computer Science & Engineering
Electrical & Electronics Engneering

Aernautical Engineering
Civil Engineering
Electronics & Communication Engg
Mechanical Engineering

MBA/ MCA
Computer Science & Engg
Power Electronice & Drives
Applied Electronic
Embedded Syatems
Software Engineering

**27,000**
Students study in our Institutions

**11,500**
Students reside in 2250 rooms

**350 acres**
Campus Speed over aesthetically landscaped with lush green environement











**Dhanalakshmi Srinivasan College Of Arts & Science For Women, (Perambalur)**
**Srinivasan College Of Arts & Science :, (Perambalur)**

### UG COURSES

| | | |
|---|---|---|
| B.A. English | B.B.A. | B.Com. |
| B.Lit Tamil | B.C.A. | B.Sc. Maths |
| B.Sc.Physics | B.Sc. Biochemistry | B.Sc. Biochemistry |
| B.Sc. Chemistry | B.Sc. Comp. Science | B.Sc. Information Tech |
| B.Sc. Microbiology | B.Sc. Hotel Mgmt. & Catering Sci | |

### PG COURSES

| | | |
|---|---|---|
| M.A. Tamil | M.A. English | M.Com. MSW |
| M.B.A. | M.B.A. | M.Bc. Maths |
| M.Sc. Biochemistry | M.Sc. Microbiology | M.Sc. Chemistry |
| M.Sc. IT | M.Sc. Comp. Science | M.Sc. Bio-informatics |
| M.Sc. Physics | M.Sc. Biotechnology | M.Sc. Organic Chemistry |

**M.Phil Programmes :** Biotechnology / Chemistry / Commerce / Maths / Microbiology / Tamil

visit us for more information : www.dsgroups.org

**Shri A. SRINIVASAN**
Founder - Chaiman



# பக்தி இலக்கியம்

★ ‘சிந்துக்கவி பேரரசு’ அண்ணாமலை ரெட்டியார்



# காவடிச்சிந்து

## பாடலும் விளக்கமும்..

தொடர் 05

**பாட்டு 7 கோயில் வளம் இராகம்**

## 01

**சென்னிகுளநகர் வாசன் – தமிழ்**
**தேறும் அண்ணாமலைத் தாசன் – செப்பும்**
**செகம் மெச்சிய மதுரக்கவி**
**யதனைப் புயவரையிற் புனை தீரன்**
**அயில் வீரன்**

**பதவுரை:**

தாசன் – தொண்டன், மதுரம் – இனிமை, புயம் வரை தோளாகிய மலை, புனை – அணி, அயில் வேல்.

**பொழிப்புரை:**

சென்னிகுள நகரில் பிறந்து வாழ்ந்து தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவன் அண்ணாமலைக் கவிஞன். அவன் முருகப்பெருமானது தொண்டன். அவன் இயற்றியதும் உலகெலாம் புகழ்வதுமான மதுரமான காவடிச்சிந்துப் பாமாலையை முருகப்பெருமான் விரும்பித் தனது தோள்களிலே அணிந்து கொண்டுள்ள தீரன். அவன் வேற்படையை ஏவிச் சூரர்களை வென்று வெற்றி கொண்ட அயில் வீரன்.

**தெளிவுரை:**

**மதுரக்கவியதனைப்புய வரையிற் புனை தீரன்:**

அண்ணாமலைக் கவிஞன் இயற்றிய மதுரமானதும் உலகெலாம் புகழ்வதுமான காவடிச்சிந்துப் பாமாலையை முருகப் பெருமான் விரும்பிக் குன்று போன்ற தனது திருத்தோள்களிலே அணிந்து கொண்டனன்.

**யான்புகலும் அலங்கல் அணிந்தருளே.**

**– திருஅருட்பா**

**மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்**
**சொல்லே புனையும் சுடர் வேலவனே**

**– கந்தரநுபூதி – 29**

எவராலும் வெல்லமுடியாத சூரபன்மன், தாருகன், கிரவுஞ்சன் முதலான அசுரர்களை அடியோடு அழித்துத் தேவர்களைச் சிறைமீட்டிய தீரச்செயலைப் புரிந்தவரானதால் திருமுருகனைத் தீரன் என்றனர்.

**தீர தீர திராதி தீரப் பெரியோனே**

**– திருப்புகழ்**

**அயில்வீரன்:**

வேற்படையை ஏவி அசுரர்களை யெல்லாம் திருமுருகன் அழித்து வென்றமையால் அயில்வீரன் என்றனர்.

## 02

**வன்னமயில்முரு கேசன் – குற**
**வள்ளிபதம்பணி நேசன் – உரை**
**வரமேதருகழுகாசலபதி**
**கோவிலின் வளம் நான் மறவாதே**
**சொல்வன் மாதே**

**பதவுரை:**

வன்னம் – அழகு, பதம் – பாதம், உரை – சொற்பயன் உயர்ச்சி. உறை – இருப்பிடம்.

**பொழிப்புரை:**

அழகிய நீலநிற மயிலை வாகனமாகக் கொண்டவன் திருமுருகன். குறக்குல வள்ளி நாயகியின் திருவடிகளை நேசத்துடன் பணிபவன். அடியார்கள் வேண்டும் வரங்களை வேண்டியவாறு வழங்கும் கழுகாசலபதி எழுந்தருளியுள்ள கோவிலின் சிறப்பை நான் இப்போது மறவாமல்

சொல்லுவன். மாதே கேட்பாயாக.

**தெளிவுரை:**

**குறவள்ளிபதம் பணி நேசன்:**

குறக்குலதிலகம் வள்ளி நாயகியின் பாதங்களை அன்புடன் பணிபவன்.

ஞானத்தால் உருவாகிய அருட்பெரும் சோதியான முருகவேள் வள்ளி நாயகியை வணங்கினார் என்பது ஆசையால் அல்ல. அந்த ஆன்மாவை உய்விக்கக் கருதி அத்துணை எளியவனாகி வேண்டியும் தொழுதும் ஆட்கொண்டார் என்க.

**பணியா என வள்ளிபதம் பணியும்**
**தணியா அதிமோக தயாபரனே**

**– கந்தரநுபூதி – 6**

**பாளைக்குழல் வள்ளிபதம் பணியும்**
**வேளைச் சுரபூபதி மேருவையே**

**– சுந்தரநுபூதி – 22**

**உரைவரமேதருகழுகாசலபதி:**

அடியார்கள் வேண்டிக்கேட்கும் வரங்களை வேண்டியாங்கு வழங்கும் கழுகாசலபதி.

**குறிப்பு:**

உரை என்ற வார்த்தைக்குச் சொற் பயன் உயர்ச்சி என்று பொருள் கூறப்பட்டுள்ளது. ஒன்றைச் சொல்லி அதன் பயனைப் பெறுவது சொற்பயன், உரைவரமே என்பதற்கு வேண்டிக் கேட்கும் வரம் எனப்பொருள் கொள்ளப்பட்டுள்ளது. சிலபதிப்புக்களில் உறை வரமே என வந்துள்ளது. உறை என்ற சொல்லுக்கு வசி (வசித்தல்) வாழ் (வாழ்தல்) என்ற பொருள் கொண்டு வாழ்வதற்குரிய வரங்கள் தரும் கழுகாசலபதி என்று பொருள் கொள்ளவும் கூடும்.

## 03

| | |
|---|---|
| **கோபுரத்துத் தங்கத்** | **தூவி – தேவர்** |
| **கோபுரத்துக்கப்பால்** | **மேவி – கண்கள்** |
| **கூசப்பிரகாசத் தொளி** | |
| **மாசற்றுவிலாசத் தொடு** | **குலவும்** |
| **புவி** | **பலவும்** |

**பதவுரை:**

தூவி – கலசம், தேவர்+கோ–தேவர்களுக்கு அரசனான இந்திரன், புரம் – தேவலோகம், விலாசம் – அழகு, குலவும் – உலாவும்.

**பொழிப்புரை:**

கழுகுமலைக் கோயில் கோபுரத்தின் உச்சியில் அமைந்துள்ள தங்கக் கலசங்கள் தேவர்களின் அரசன் இந்திரனின் உலகு இந்திரலோகத்தையும் கடந்து அப்பால் சென்று காட்சியளிக்கின்றன. அவற்றின் ஒளிப்பிரவாகம் அமரர்களின் கண்கைளைக் கூசச் செய்து மாசுமறுவின்றி அழகுடன் பல உலகங்களுக்கும் பரவிச்சென்று உலாவும்.

**தெளிவுரை:**

**தேவர் கோபுரத்துக்கு அப்பால் மேவி:**

தேவர் + கோ+புரம் எனக் கொள்ளப்பட்டது. தேவர்களுக்கு அரசனான இந்திரனின் உலகு இந்திரலோகம். கழுகுமலைக் கோயிலின் கோபுரத்தின் உச்சியில் அமைந்துள்ள தங்கக் கலசங்கள் இந்திர லோகத்தையும் தாண்டி அப்புறம் சென்று பிரகாசிக்கின்றன.

## 04

| | |
|---|---|
| **நூபுரத்துத் தொனி** | **வெடிக்கும் – பத** |
| **நுண்ணிடைமாதர்கள்** | **நடிக்கும் – அங்கே** |
| **நுழைவாரிடுமுழவோசைகள்** | |
| **திசைமாசுணம் இடியோவென** | **நோக்கும்** |
| **படி** | **தாக்கும்** |

**பதவுரை:**

நூபுரம் – சிலம்பு எனும் காலணி, தொனி – சப்தம், முழவு. மத்தளம், மேளம், மாசுணம் – பாம்பு.

**பொழிப்புரை:**

காற்சிலம்புகள் வெடிபோல ஒலிக்க அங்கே நுண்ணிடை மாதர்கள் நடனமாடினர். காவடியைத் தோளின் மீது சுமந்து வரும் பக்தர்களும் மேளதாளங்களை இசைப்பவர்களும் நெருங்கிய கூட்டத்துள் நுழைந்து கோவிலுக்குள் சென்றனர். அவர்களின் மேளதாள இசை முழக்கத்தைச் செவியுற்ற திசைநாகங்கள் இடிதான் இடிக்கிறதோ எனப் பயந்து நடுங்குமாறு அம் முழக்கம் தாக்கியது.

**தெளிவுரை:**

**நூபுரத்துத் தொனி வெடிக்கும்:**

**நடன மாதர்களின் காற்சிலம்புகள் வெடிபோல ஒலிக்கின்றன.**

**ஆரண நூபுரஞ் சிலம்பு அடிகள் போற்றி**

**– திருவிளையாடல்**

**நுண்ணிடைமாதர்கள் நடிக்கும்:**

நுண்ணிய இடைகளையுடைய மாதர்கள் அங்கே நடன மிடுகிறார்கள். மின்னொத்த நுண்ணிடை யாளைக் கொண்டு – திவ்யபிரபந்தம் பொய்யோ யெனும் இடையாளொடும்

**இளையானொடும் போனான்**

**– கம்பராமாயணம்**

**நொசித்த இடைமாதர் நோக்கிற் படாதே**

**– திருஅருட்பா**

அகக்கூத்து புறக்கூத்து சாந்திக்கூற்று என நடனங்களில் பல வகை உண்டு. அரம்பை, ஊர்வசி, மேனகை ஆகிய தேவ மாதர்கள் போல நுண் இடைமாதர்கள் தேசிகம், வடுகம், சிங்களம் எனும் மூன்று வகை நடனங்களும் ஆடினர்.

**அங்கே நுழைவாரிடு முழ வோசைகள்:**

காவடியைத் தோனின் மீது சுமந்து கொண்டு வரும் பக்தர்களும் மேளதாளங்கள் இசைப்பவர்களும் நெருங்கிய கூட்டத்தினுள் நுழைந்து கோவிலுக்குள் சென்றனர்.

நுழைவார் இடு என்ற சொற்களுக்குத் தோல்வார் இட்டு நுழைத்துக் கட்டப்பட்ட மேளக் கருவிகள் என்றும் பொருள் கொள்ள இடமுண்டு.

**திசைமாசுணம் இடியோ வென நோக்கும் படி தாக்கும்:**

இசை முழக்கத்தைச் செவியுற்ற திசைநாகங்கள் இடிதான் இடிக்கிறதோ என நோக்கும்படி முழவோசை தாக்கியது.

திசை நாகங்கள் எட்டு. அவை வாசுகி. அனந்தன், தக்கன், சந்தபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன் என்பன.

## 05

| | |
|---|---|
| **சந்நிதியில் துஜஸ்** | **தம்பம் – விண்ணில்** |
| **தாவிவருகின்ற** | **கும்பம் – எனும்** |
| **சலராசியை வடிவார்** | |
| **பலகொடி சூடியமுடிமீதிலே** | **தாங்கும்** |
| **உயர்ந்** | **தோங்கும்** |

**பதவுரை:**

துஜஸ்தம்பம் – கொடிமரம், கும்பம் – குடம், கும்பராசி, வடிவு – அழகு, ஆர் – மிகுந்த.

**பொழிப்புரை:**

கழுகுமலைத் திருமுருகன் கோயில் சந்நிதியில் அமைக்கப் பட்டிருக்கும் கொடி மரத்தின் உச்சியில் அழகான பல கொடிகள் கட்டப்பட்டுள்ளன. வானமண்டலத்தில் சஞ்சரிக்கின்ற கும்பம் என்னும் சலராசியை அக்கொடிகள் தங்கள் தலைமீது தாங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொல்லும் அளவுக்குக் கொடிக் கம்பம் ஓங்கி உயர்ந்து நிற்கின்றது.

**தெளிவுரை:**

**விண்ணில் தாவி வருகின்ற கும்பம் எனும் சலராசியை:**

வான மண்டலத்தில் விரைவாகச் சுற்றி வருவது கும்பம் என்னும் சலராசி. கும்பராசியைச் சலராசி என்பர். கும்பராசிக்குச் சுக்கிரன் வரும் போது மழை பொழியும் என்பது மக்கள் நம்பிக்கை.

## 06

| | |
|---|---|
| **உன்னதமாகிய** | **இஞ்சி – பொன்னாட்டு** |
| **உம்பர்நகருக்கும்** | **மிஞ்சி – மிக** |
| **உயர்வானது பெறலால் அதில்** | |
| **அதிசீதள புயல் சாலவும்** | **உறங்கும்** |
| **மின்னிக்** | **கறங்கும்** |

**பதவுரை:**

இஞ்சி – மதில் கோட்டைச் சுவர், பொன்னாடு – இந்திரலோகம், உம்பர்–அமரர்கள், நகர் – அமராவதிநகர், சீதளம் – குளிர்ச்சி, புயல்– மேகம், கறங்கும் – சுழலும்

**பொழிப்புரை:**

கோயிலைச் சுற்றி எழுப்பப்பட்ட மதில் சுவர்கள் பொன்னாடு எனும் தேவ நாட்டின் அமராவதிப் பட்டணத்தையும் கடந்து அப்பால் சென்று மிக உயர்ந்து நிற்கின்றன. அம்மதில் சுவர்கள் மீது குளிர்ந்த கரிய மேகங்கள் படிந்து உறங்குவது போலக் காட்சி அளிக்கின்றன. பின்னர் மின்னல் மின்னி இடி இடித்து மழை பொழிகிறது.

**தெளிவுரை:**

**பொன்னாட்டு உம்பர் நகருக்கும் மிஞ்சி:**

பொன்னாடு என்று போற்றப்படும் தேவநாட்டின் தலைநகர் அமராவதிப் பட்டணத்தையும் கடந்து அப்பால் சென்று காட்சி அளிக்கிறது கோயிலின் மதில் சுவர்.

அந்தரம் உருவி வளர்ந்து இந்திரன் உலகு கடந்து அப்புறம் போய் நின்றதையும் சந்தனமரம் என்று பாட்டு 8ல் கவிஞர் சொல்லியுள்ளதையும் காண்க.

## 07

**அருணகிரி நாவில் பழக்கம் – தரும்**
**அந்தத்திருப்புகழ் முழக்கம் – பல**
**அடியார் கணம் மொழி போதினில்**
**அமராவதி இமையோர் செவி அடைக்கும்**
**அண்டம் உடைக்கும்**

### பதவுரை:

இமையோர் – இமைக்காத கண்களையுடைய அமரர்கள், கணம் கூட்டம். மனிதகணத்தின் பதினெட்டுச் சிறப்புப் பற்றி அடியார்கணம் எனப் பட்டது.

### பொழிப்புரை:

அருணகிரிநாதரின் நாவினூடு விளைந்து எல்லோர் நாவிலும் பழக்கமாகி விட்ட அந்தத் திருப்புகழ் பாக்களைப் பல அடியார் கணம் ஒன்று சேர்ந்து இசைக்க இசையின் பேரொலி முழக்கம் தேவருலக அமராவதிப் பட்டணம் வாழ் இமையோரின் காதுகளைச் செவிடுபடச் செய்தது. அத்துடன் அமையாது அண்ட கோள முகடும் உடையும் படித்தாக்கியது.

### தெளிவுரை:

### அருணகிரி நாவில் பழக்கம் தரும் அந்தத் திருப்புகழ் முழக்கம்:


அருணகிரி நாதரின் நாவினூடு விளைந்து எல்லோர் நாவிலும் பழக்கமாகி விட்ட அந்தத் திருப்புகழ் பாக்களை அடியார் குழாம் ஒன்று சேர்ந்து இசைக்கும் பொழுது எழுகின்ற இசை முழக்கம் அண்டம் உடைக்கும்.

**சிரிப்பவர் முடிக்கும் சினத்தவர் குடிக்கும்**
**திருப்புகழ் நெருப்பு என்று அறிவோம் நாம்.**

**பொருப்பையும் இடிக்கும் நெருப்பையும் எரிக்கும்**

**– திருப்புகழ்**

**– தொடரும்**



கடந்த ஆண்டு 19.05.2024 எழுத்தாளர் இயக்குநர் எஸ்.ராஜகுமாரனின் மகள் நேசிக்காவுக்கும் ராம் அருண்ராஜுக்கும் திருவாரூரில் நடந்த திருமண நிகழ்வைத் தொடர்ந்து, 19.06.2024 அன்று சென்னையில் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய டேக்பான் பொருளாளர் வழக்கறிஞர் கிருபாகரன், பத்திரிகையாளர் நக்கீரன் ஆசிரியர் கோபால், டேக்பான் தலைவர் வழக்கறிஞர் வைத்திலிங்கம் ரெட்டி, ரெட்டி மலர் ஆசிரியர் செல்வராஜ், கவிஞர் அமுதா தமிழ்நாடன் ஆகியோருடன் மணமக்களும் மணமகளின் பெற்றோரும்!

# CAUVERY COLLEGE FOR WOMEN

Nationally Re-accredited with 'A' Grade (CGPA 3.37 Out of 4) by NAAC (2010 - 2015)

**(RUN BY REDDY EDUCATIONAL TRUST, TRICHY)**
**Recognised as per G.O. No. 1298 Dt. 1.10.1984**
**Affiliated to Bharathidasan University ACA/1 100/04 Dt.12.84**
**UGU Recognized under section 2(f) 12 (B) Dt. 11.12.2003**

**Annanmalai Nagar, Tiruchirappalli - 620 018. Ph : 2751232 / 2751234**
**Fax : 0431 - 2751234 E-mail : cauverycollege_try@rediffmail.com**
**Website : cauverycollege.ac.in**



## U.G

- B.A. (Tamil, English)
- B.S.W.
- B.Com.
- B.Com. (Computer Applications)
- B.B.A.
- B.Sc. (Maths, Physics, Chemistry, Microbiology)
- B.Sc. (Biotechnology, Computer Science)
- B.C.A. (Bachelor of computer Application)
- Bachelor of Information Technology
- Bachelor of Nutrition and Diabetics

## P.G

- M.A. (Tamil, English)
- M.Com
- M.S.W.
- M.Sc. (Mathematics, Physics)
- M.Sc. (Chemistry, Microbiology)
- M.Sc. (Food Service Management & Diabetics)
- M.Sc. (Information Technology)
- M.Sc. Computer Science
- PGDCA

## RESEARCH

- M.Phil (Commerce, Social Work, Computer Science)
- Ph.D. (Social Work, Tamil, Commerce, Mathematics, Computer Science)



ஸ்ரீ சீதாலக்ஷ்மி திருமண மண்டபம் A/C
எண்:305, பூவை நெடுஞ்சாலை, மதுரவாயல், சென்னை - 95.
800 பேர் அமரும் வசதி 200 பேர் உணவு அருந்தும் வசதி உள்ளது
நவீன சமையல் கூடம் குடி தண்ணீர் வசதி உள்ளது 10 A/C ரூம்கள்
லிஃப்ட் வசதி உண்டு கார் பார்க்கிங் டூ வீலர் நிறுத்தும் வசதிகள் உள்ளது
அனைத்து சுபகாரியங்களுக்கும் சைவம் மட்டும்
மேலும் விவரங்களுக்கு:
94446 06618 / 94443 33922.


TAGORE MATRIC.HR.SEC.SCHOOL
(Recognised by Govt.of Tamilnadu)
Nanmangalam
PH : 044 - 2268 0369
TAGORE MATRIC. HR. SEC. SCHOOL • CHENNAI-129
LEARN AND SERVE
KG.CHILD @ PLAY
OUTDOOR PLAY
J.NEMIDOSS
CORRESPONDENT
No.2/212, ELUMALAI SALAI,
NANMANGALAM, CHENNAI - 129.
Email ID : tagorematriculationschool@gmail.com
Website ID : www.tagorematric.com
PHYSICS LAB
COMPUTER LAB




★ திருமதி ராணி எழில்மாறன்
அண்ணாநகர், சென்னை

## புரோட்டீன் தோசை

**தேவையான பொருட்கள்:** முழு பாசிப்பருப்பு – 1 கப், கம்பு – 1 கப், இஞ்சி – சிறியது, பச்சை மிளகாய் – 3, கல் உப்பு – 1 டீஸ்பூன்.

**செய்முறை:** பாசிப்பருப்பு, கம்பு இரண்டையும் 8 மணி நேரம் ஊற வைக்கவும். பாசிப்பருப்பு, கம்பு, இஞ்சி, பச்சை மிளகாய், உப்பு சேர்த்து நைசாக அரைக்கவும். அரைத்த மாவை தோசை பதத்திற்கு கரைத்து தோசை வார்க்கவும்.

## கந்தர்ப்பம்

**தேவையான பொருட்கள்:** பச்சரிசி – 2 ஆழாக்கு, புழுங்கலரிசி – அரை ஆழாக்கு, உளுத்தம் பருப்பு – அரை ஆழாக்கு, வெந்தயம் – 1 ஸ்பூன், வெல்லம் – 1 ஸ்பூன், தேங்காய் – 1 மூடி, ஏலக்காயத் தூள் – அரை டீஸ்பூன், எண்ணெய் – கால் கிலோ.

**செய்முறை:** அரிசி, உளுந்து வெந்தயம் மூன்றையும் நன்கு களைந்து இரண்டு மணி நேரம் ஊற வைக்கவும். தேங்காய் துருவிக் கொள்ளவும். ஊற வைத்த அரிசி, உளுந்து, வெந்தயம் அரைத்து நைசாக வந்தவுடன் வெல்லம் சேர்த்து அரைக்கவும்.

பிறகு மாவுடன் தேங்காய்த் துருவல், ஏலக்காய்ப் பொடி சேர்த்து தோசை மாவு பதத்திற்கு அரைத்து எடுக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கரண்டியால் மாவை ஊற்றவும். பணியாரம் மேலே எழும்பி வந்தவுடன் மறுபுறம் திருப்பி பொன்னிறமானவுடன் எடுக்கவும். ■




J Kay TVS
TVS
Authorised Main Dealers For
TVS Motor Company Limited
D/182, 100 Feet Road, Ozhandai, Opp to R.T.O Office, Puducherry - 605 004.
Tel : 0413-2280756 / 2280757.
வகை வகையான வண்டிகள்....
விதம் விதமான வண்ணங்கள் ....
வாங்கிட தூண்டும் சலுகைகள் ...
TVS RAIDER
THE WICKED RIDE
புதிய அறிமுகம்
INTRODUCING THE ALL-NEW
TVS JUPITER 125
Zyada se bhi zyada


LUXURIOUS ROOMS
DINING & RESTAURANT FACILITIES
SPACIOUS BANQUETS
TECHNOLOGICAL SUPPORT
HIGH SPEED INTERNET
AMPLE PARKING SPACE
HOTEL RAM INTERNATIONAL, PUDUCHERRY
HOTEL RAM INTERNATIONAL
HOTEL RAM INTERNATIONAL,
398 ANNA SALAI, PUDUCHERRY – 605001
Ph: (0413) 2337230 – 35 & 4206600 – 03
Email: raminternationalhotel@gmail.com
www.hotelraminternational.com







Hotel Abi Krishnaa
HOME AWAY FROM HOME

#1, 2, 3, 1st Cross, Pon Nagar Reddiarpalayam,
Pondicherry - 605010.
Cell: 93646 48400, 93646 48499 Ph: 0413 - 2206969
Email: info@abikrishna.com

**Facilities**

- Luxuriously furnished suites room
- Running Hot & Cold Water
- Satellites TV channels
- Ample Car Parking
- All major Cards Accepted
- Banquets & Conferences Facilities
- Kamadhenu Veg Restaurant
- Laundry & Cleaners
- 24 Hours Front Desk
- CCTV Surveillance Camera

Abi Krishnaa
Tiles & Sanitary Mart

NO.182 Villiyanur Main road,
Jawahar Nagar, Reddiyarpalayam,
Pondicherry - 605010
CELL: 9443257722 / 7373100211 / 7373100288

**TILES, FITTING & SANITARY WARES, PLYWOOD, MICA SHEET, KITCHEN SINK**

OUR BRANDS

Kajaria
RAK
SOMANY
jaquar
KOHLER.
ESSCO
Fine Plywood
MERINO LAMINATES
PRINCE Kitchen Sink

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

39 Years of Academic Excellence 2022 - 2023

TNEA COUNSELLING CODE 4962

## COURSES OFFERED

### UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

### PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT UPDATES

For 2022 Batch
95% Placement

For 2023 Batch
500+ Offers
275+ Internship Offers
as on 05th January 2023

95% CONSISTENT PLACEMENT | 150+ COMPANIES | 625+ OFFERS | 15 LPA HIGHEST SALARY

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA



NEC Special Features

nirf Rank - 169
ARIIA 2021 Band - Excellent
DST - FIST Sponsored
NAAC A
K.R. Innovation Centre
NBA Accredited
NewGen IEDC, DST, New Delhi

FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA Consultancy Services, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN, TESSOLVE, wipro, DATA PATTERNS, MISTRAL, Brakes India Private Limited, Capgemini, Centizen, ELITE, embedUR, vuram, HEXAWARE, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

39 Years of Academic Excellence

COURSES OFFERED

D.C.E. - Diploma in Civil Engineering | D.E.E.E. - Diploma in Electrical and Electronics Engineering | D.M.E. - Diploma in Mechanical Engineering
D.E.C.E. - Diploma in Electronics and Communication Engineering | D.A.E. - Diploma in Automobile Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net

26 Years of Academic Excellence

COURSES OFFERED

UG
B.A. - English  B.Com. - Professional Accounting
B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

PG
M.Sc. - Computer Science
M.Sc. - Micro Biology

# KR Kayaar Exports Private Limited

(Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com

புதிய தொடர் | ★ எம்.வி.வைத்திலிங்கம் ரெட்டியார்



01

# நெஞ்சில் நிறைந்தவர்கள்!

**புதுச்சேரி மாநிலத்தின் மூத்த வழக்கறிஞர். தென்னிந்திய ரெட்டியார் சமுதாயத்தை ஒருங்கிணைத்து உயர்வடையச் செய்யும் நோக்குடன் தொடங்கப்பட்ட ஆறு மாநில ரெட்டி நலச் சங்கத்தின் (டேக்பான்) தலைவர். தனி வாழ்விலும், பொது வாழ்விலும் அவருடைய நீண்ட அனுபவங்களை இந்த இதழ் முதல் சுயசரிதைத் தொடராக பதிவு செய்கிறார்...**

## பிறந்தேன்.. வளர்ந்தேன்...

அன்றைய தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் தாலுகா இன்று கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தாலுக்கா திருநாவலூர் பஞ்சாயத்து யூனியன், உளுந்தூர் பேட்டை நகரத்தின் கிழக்கே 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம்தான் நான் பிறந்த மதியனுரர் என்ற கிராமம்.

மதியனுரர் கிராமம் அந்த காலத்தில் மிக செழிப்பான கிராமம். ஊரின் நுழைவு வாயிலுக்கு முன்பு ஒரு பெரிய ஏரி, ஏரிக்கரையில் ஒரு ஐய்யனார் கோவில். அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் ஊரின் எல்லை ஆரம்பம். அந்த ஒரு கிலோ மீட்டர் முழுவதும் ரோட்டின் இரு புறங்களிலும் பச்சை பசேலேன்ற நெல் வயல்கள். ஊரின் முகப்பில் இடது பக்கத்தில் ஒரு பெரிய தாமரை குளம். அந்த குளத்து தண்ணீர் தான் ஊரில் எல்லோர்க்கும் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுத்துவார்கள். காலை 6 மணி முதல் 8 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 6 மணி வரையிலும் எங்கள் ஊர் அனைத்து வீட்டு பெண்களும் வசதி படைத்த வீட்டின் வேலைகார பெண்களும் இடுப்பில் ஒரு குடமும், தலையில் ஒரு குடமுமாக வரிசையாக வந்து தண்ணீர் சுமந்து செல்வதை பார்ப்பதற்கு ஒரு இனிய நிகழ்வாக இருக்கும்.

## திரௌபதி அம்மன் கோவில்

அந்த தாமரை குளத்தின் தென் புறத்து கரையில் ஒரு பழைமையான திரௌபதி அம்மன் கோவில். அவ்வப்போது திருவிழா காலங்களில்

18 நாட்கள் மகாபாரதம் சொற்பொழிவு இரவு 9 மணி முதல் 11 மணி வரை நடக்கும். கடைசி நாளில் அரவான் பொம்மை பெரிய அளவில் செய்து தீ மிதி நடக்கும். தற்போது அந்த கோவில் புதிப்பிக்கும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. அந்த கோவிலின் கிழக்கு பக்கத்தில் நான்கு பெரிய ஆலமரம் இருக்கும். ஒரு ஆலமரத்தின் கீழே கருமார ஆசாரி என்பவர் கட்டை வண்டிகளுக்கு இரும்பு பட்டை செய்வதும், கத்தி, கடப்பாரை போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் வார்த்து எடுப்பதும் என்று வேலை செய்து கொண்டிருப்பார். இப்போது அதெல்லாம் மாறிவிட்டது.


அந்த தாமரை குளத்தின் தென்புறம் சாலை. அந்த சாலைக்கு தென்புறம் ஒரு பெரிய நந்தவனம். அதில் நிறைய பழச்செடிகள், பூச்செடிகள், நெல்லிக்காய், விளாம்பழம் போன்ற மரங்கள் இருக்கும். நந்தவனத்து முகப்பில் ஒரு ஐம்பது நபர்கள் உட்காரும் அளவிற்கு ஒரு கொட்டகை. அதற்கு பின்னால் ஒரு சிறிய கருவறை. அதில் அத்தனை சாமி படங்கள் இருக்கும். குறிப்பாக. தஞ்சாவூரில் செய்யப்பட்ட பெரிய கிருஷ்ணர் படம் இருக்கும். தினமும் அங்கு தீபாரதனை செய்து பிரசாதம் கொடுப்பார்கள். மார்கழி மாதம் வந்தால் அதிகாலை அங்கிருந்து புறப்பட்டு ஊரை சுற்றி பஜனை பாடி வருவார்கள். இப்போது அங்கு எந்த அடையாளமும் இல்லை. ஒரு சிறிய மாரியம்மன் கோவில் உண்டு. அதற்கு மேற்கில் ஒரு பெரிய கருங்கல்லில் ஆன உயரமான தூண் நின்று கொண்டிருக்கும். அதனுடைய வரலாறு இன்று வரை யாருக்கும் தெரியவில்லை.



## தாத்தா வீடு

ஊரில் நுழைந்தவுடன் வலது புறத்தில் ஆசாரி களின் வீடுகள் இடது புறத்தில் கோனார்களின் வீடுகள். அதிலிருந்து இரு புறத்திலும் ரெட்டியார் கள் வீடுகள். ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பெயர் உண்டு. ராம்பாக்கத்து ரெட்டியார் வீடு, அம்மனத்தார் ரெட்டியார் வீடு, தாத்தா வீடு என்று அழைப்பது வழக்கம். அதையடுத்து ஒரு சந்து அந்த சந்தின் வடமூலையில் ஒரு சிவன் கோவில். அந்த கோவிலைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால் அது மிகப்பெரிய புராதான கோவில். நான் சிறுவனாக இருந்த போது சுமார் 60 ஆண்டு களுக்கு முன்பு அந்த கோவிலை பராமரிப்பதற்கும் இரண்டு வேலை தீபாரதனை செய்வதற்கும் ராம்பாக்கத்திலிருந்து ஒரு 12 வயது பிராமண சிறுவனையும் அவருடைய தாயாரையும் மதியனுரருக்கு என் அப்பா அழைத்து வந்து கோவிலுக்கு பக்கத்திலேயே ஒரு கூரை வீடு கட்டி அதில் குடியமர்த்தி அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தார்கள்.





## சிதம்பரம் குருக்கள்

அந்த சிறுவன் அந்த சிவன் கோவிலுக்கு இரண்டு வேலையும் தீபாரதனை செய்வார். அத்துடன் கூட எனது தந்தை எங்கள் ஊருக்கு அருகில் உள்ள இலுப்பையூர், புலியூர் ஆகிய கிராமங்களில் எழுந்தருளியுள்ள கோவில்களுக்கும் சென்று தீபாரதனை செய்ய ஏற்பாடு செய்து கொடுத்தார். நாளடைவில் அந்த சிறுவன் வளர்ந்து வேதங்கள் அனைத்தையும் கற்று பிற ஊர்களில் நடக்கும் கும்பாபிஷேகத்திற்கு சென்று குடமுழக்கு நடத்தி வந்தார். அவருடைய திருமணத்தில் என் தந்தை முக்கிய பங்கு வகித்தார். பிற்காலத்தில் அவர் குடும்பத்துடன் புதுச்சேரிக்கு வந்து குடியமர்ந்து கோவில்களுக்கு கும்பாபிஷேகம் தலைமையேற்று நடத்தும் அளவிற்கு வளர்ந்து ஜாதகமும் பார்த்து சொல்ல ஆரம்பித்தார்.

அவர் மேலும் வளர்ச்சி பெற்று புதுச்சேரிக்கு அடுத்துள்ள மொரட்டாண்டி என்ற கிராமத்தில் சுமார் 10 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தை வாங்கி 54 அடி உயரமுள்ள பிள்ளையார் சிலை, 36 அடி உயரமுள்ள சனீஸ்வரன் சிலை, அதை சுற்றி மீதமுள்ள 8 கிரகங்களுக்கு ஆளுயர சிலைகள் 27 நட்சத்திரங்களுக்கு சிலைகள் அவைகளுக்கு உண்டான 127 மரங்கள் நிறுவி அது ஒரு வழிப் பாட்டு தலமாகவும் சுற்றுலா தலமாகவும் நிறுவி இப்போது தினமும் ஆயிரக்கணக்னோர் வந்து அருள் பெற்று செல்கிறார்கள். அவர் வயது மூப்பின் காரணமாக இப்போது கோவில் வேலை களுக்கு செல்வதில்லை. ஜாதகமும் பார்ப்பதில்லை. அவர் கடைசியாக கலந்து கொண்ட நிகழ்ச்சி என் தந்தை கேட்டு கொண்டதற்கு இணங்க புதுச்சேரியில் நான் கட்டிய வீட்டிற்கு கிரகபிரவேசம் நடத்தி கொடுத்தார். அவர் தான் சிதம்பரம் குருக்கள் என்கின்ற பொன்முடி குருக்கள்.

## சிவன் கோவில் கும்பாபிஷேகம்

இந்த அளவில் எங்கள் ஊரிலேயே சுமார் 6000 சதுரஅடி வீட்டை வாங்கி எங்கள் ஊரில் 35 ஏக்கர் நிலம் வாங்கி 6 மோட்டார் பம்புகள் போட்டு வார இறுதியில் அங்கே தங்கி விவசாயம் பார்த்து வருகிறார். அப்படிப்பட்ட எங்கள் ஊர் சிவன் கோவில் 10 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கும்பாபிஷேகத்திற்கு அவர் கோவில் கோபுரத்தை புணரமைத்து கொடுத்தார். இன்றளவும் அந்த சிவன் கோவில் தூங்கா விளக்குடன் எல்லா ஆராதனைகளும் ஊர் மக்களால் நடைபெற்று வருகிறது.

## எங்கள் வீடு

எங்கள் ஊர் குறுக்கு சந்தில் நான்கு ரெட்டியார் வீடுகள். அதில் ஒரு வீட்டில் தபால்நிலையம் இயங்கி வந்தது. மேற்படி குறுக்கு சந்தை கடந்து கிழக்கு நோக்கி சென்றால் இரண்டு ரெட்டியார் வீடுகள். அதற்கு அப்பால் கோவில் பண்டாரங்கள் வீடுகள். அதையும் தாண்டி இடது புறம் தெருவில்

திரும்பினால் கோவில் பூசாரிகளின் வீடுகள், கரெண்டுகாரர் வீடு, அதையும் கடந்து சென்றால் ஒரு சிறு வெட்டவெளி. அதில்தான் தெரு கூத்துகள் நடக்கும். அதையும் கடந்து மேற்கு பக்கத் தெருவில் குயவர்கள் வீடு அமைத்து மண்பாண்டங்கள் செய்வார்கள். சந்தை தாண்டி வலதுபுறம் திரும்பும் தெருவில் ஐந்து ரெட்டியார் வீடுகள். கடைசி வீடு தான் எங்கள் வீடு. எங்கள் வீட்டின் தெரு வாசல் மேற்கு பார்த்திருக்கும். ஆனால் எங்கள் வீட்டு சுற்று சுவறில் கிழக்கு பார்த்தது போன்று நுழைவு வாயில் இருக்கும்.

ஒரு ஏக்கர் பரப்பளவில் எங்கள் வீடும், மாட்டு கொட்டகைகள், டயர் வண்டி, பெட்டி வண்டி கொட்டகைகள் இருக்கும். தெரு வாசலுக்கு எதிரில் கொட்டகை போட்டிருக்கும். அதில் தான் எங்கள் ஆஸ்டின் கார் நிற்க வைத்திருப்பார்கள். வீட்டின் முன்புறத்தில் ஒரு பெரிய ஓடு போட்ட தாழ்வாரம். தாழ்வாரத்தை கடந்து இரண்டு பக்கமும் திண்ணைகள் இருக்கும். தெரு வாசல் படியை கடந்ததும் ஒரு நடவை என்று சொல்லப்படும் ஒரு பகுதி இருக்கும். அதில் கிழக்கு பக்கத்தில் ஒரு திண்ணையும் மேற்கு பக்கத்தில் ஒரு வரவேற்பு அறையும் இருக்கும். அது விருந்தினர்கள் வந்தால் தங்குவதற்கு கட்டில் மெத்தை போட்டிருக்கும். நடுப்பகுதியை கடந்து வீட்டிற்குள்ளே சென்றால் நான்கு புறமும் ஒடு போட்ட தாழ்வாரங்கள் இருக்கும். நடுவில் இரும்பு கம்பி போட்ட பெரிய வாசல் இருக்கும். நான்கு தாழ்வாரங்களையும் சுற்றி ஐந்து அறைகள் உண்டு.

மேற்கு புறத்தில் உள்ள அறை என்னுடைய தந்தை படுக்கும் அறை. வடபுறத்தில் உள்ள அறை சாமி அறை. நடுவில் பரணை போட்ட சாமான்கள் தொம்பைகள் வைத்திருக்கும் அறை. அதற்கு அடுத்து விறகு அறை. கிழக்கு பக்கத்தில் இருக்கும் அறை மர அலமாரிகள் நிறைந்த அறை. தோட்டத்து கதவை திறந்தால் சமையல் செய்வதற்கு ஒரு பெரிய தாழ்வாரம். அதில் என்றும் அணையா மண்ணிலான அடுப்பு புகைந்து கொண்டிருக்கும். வீட்டிற்கு பின்னால் ஒரு கிணறு. அதை தாண்டி ஒரு சுற்று சுவர். அதற்கும் பின்னால் வயல்வெளி. எங்கள் வீட்டிற்கும் முன்பக்க சுற்று சுவருக்கும் இடையே தெற்கு பக்கத்தில் எப்போதும் ஒரு பம்பு செட்டு இறைத்து கொண்டிருக்கும். தாமரை குளத்திலும் கிணற்றிலும் தண்ணீர் குறையும் போது ஊர் மக்கள் பெரும்பாலோர் எங்கள் மோட்டரில் தான் தண்ணீர் பிடித்து செல்வார்கள்.



## பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம்

எங்கள் தெருவில் கடைசி வீடான எங்கள் வீட்டை தாண்டியும் தெற்கு நோக்கி செல்லும் தெருவில் வண்ணார்கள், நாவிதர்கள், வன்னியர்கள் வீடுகள் இருக்கும். எங்கள் வீட்டை தாண்டி மேற்கு புறத்தில் ஒரு தெரு உண்டு. அங்கு எல்லாமே ரெட்டியார்கள் வீடுகள்தான். கடைசியில் இடது புற வீடு ஒன்று செட்டியார் மளிகை கடை வைத்து குடியிருப்பார். அந்த மூலையில் ஒரு பிள்ளையார் கோவில். அந்த பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத்தின் போது எங்கள் குடும்பம் ரூ.3 லட்சம் செலவில் புதிப்பித்து கொடுத்தோம். அந்த கோவிலுக்கு மேற்கே ஒரு தெரு உண்டு. அதிலும் வன்னியர்கள் வீடுகள் உண்டு. இந்த தெரு நேராக சென்று முதலில் சொன்ன தாமரை குளத்தில் முடியும். பிள்ளையார் கோவிலுக்கு தெற்கில் எங்கள் ஊர் காலணி உள்ளது. எங்கள் ஊரில் உள்ள வீடுகளின் எண்ணிக்கையை விட காலணியில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை அதிகம்.

## மதியனூர்

என் குடும்ப வரலாறு மிகப் பெரியது. எங்கள் குடும்பத்தின் பூர்வீகம் கடலூர் பக்கத்தில் உள்ள குட்டியான்குப்ப் என்று சொல்வார்கள். இந்த



கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்து மதியனூருக்கு வந்தவர்கள் தான் என்னுடைய பெரியப்பா ராமசாமி ரெட்டியார் அவருடன் வந்தவர் தான் என்னுடைய அப்பா வெங்கடசாமி ரெட்டியார். எங்கள் குடும்பம் செல்வந்தர் குடும்பம். எங்கள் வீட்டை பெரிய மணியக்காரர் வீடு என்று சொல்வார்கள். என்னுடைய பெரியப்பா ராமசாமி ரெட்டியார் அவர்கள் பண்ருட்டி திருவதிகை பக்கத்தில் உள்ள அப்பர்சாமி பிறந்த ஊரான திருவாரூரில் ராகவ ரெட்டியாருக்கும் நர்சம்மாளுக்கும் இரண்டாவதாக பிறந்த காமாட்சி அம்மாளை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்ததாம். என் பெரியப்பா அகால மரணம் அடைந்து 16வது நாள் அவருடைய ஒரே மகனும் ஒரு வயது கூட நிரம்பாதவர் இறந்து விட்டாராம்.

## வெங்கட சாமி ரெட்டியார் திருமணம்

என்னுடைய பெரியம்மாள் காமாட்சியம்மாள் தன்னுடைய கொழுந்தனார் என் அப்பா வெங்கடசாமி ரெட்டியாருடன் தனித்து விடப்பட்டார்கள். என் பெரியம்மாவுடன் பிறந்தவர்கள் ஒரு அக்காள் பெயர் ஜனகம்மாள். அவர்கள் மேல்பட்டாம்பாக்கத்து அருகில் உள்ள சொர்ணாவூர் வெங்கடகிருஷ்ணா ரெட்டியாரை திருமணம் செய்து வாழ்ந்து வந்தார்கள். என் பெரியம்மாவிற்கு ஒரு தம்பி நாரா ரெட்டியார். அவர் மனைவி ஜெயலட்சுமி அம்மாள். ஒரு தங்கை சரஸ்வதி அம்மாள். கைம்பெண்ணான என் பெரியம்மா திருவாமூருக்கு சென்று தன்னுடைய அம்மா நரசம்மாள், அக்கா ஜனகம்மாள், தம்பி நாரா ரெட்டியார் ஆகியோருடன் பேசி தன்னுடைய தங்கையான சரஸ்வதி அம்மாளை தன்னுடைய கொழுந்தனார் வெங்கட சாமிக்கு மணமுடிக்க வலியுறுத்தி அதன்படியே வெங்கடசாமி ரெட்டியாருக்கும் சரஸ்வதி அம்மாளுக்கும் 31-7-1936 வெள்ளிக்கிழமை அன்று திருவாமூரில் வெகு விமரிசையாக திருமணம் நடந்தது. திருமணத்தின் போது என் அப்பாவிற்கு 23 வயது என் அம்மாவிற்கு 13 வயது.

திருமணம் முடிந்து ஏறத்தாழ பத்தாண்டுகள் குழந்தை பிறக்கவில்லையாம். அவர்கள் இருவரையும் என் பெரியம்மா காசி முதல் ராமேஸ்வரம் வரை உள்ள அனைத்து பிரசித்தி பெற்ற கோவில்களுக்கு அழைத்து சென்று குழந்தை வேண்டும் என்று வேண்டினார்களாம். அதன் பலனாகவும் உடல் கூறு பரிணாமம் பெற்றதாலும் 9-9-1944 அன்று முதல் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு ராதாகிருஷ்ணன் என்கிற முத்துராமன் என்று பெயரிட்டு மகிழ்ந்தார்கள். அதன்பிறகு இரண்டு வருட இடைவெளியில் என் அக்கா ருக்மணி என்கிற சுலோச்சனா, 13-10-1946 அன்றும், எனது அடுத்த அண்ணன் சுப்ரமணியன் 19-6-1948 அன்றும் பிறந்தார்கள். அதற்கு அடுத்து 19-6-1950 அன்று நான்காவது குழந்தையாக நான் பிறந்தேன். எனக்கு என்னுடைய அப்பாவின் அப்பா பெயரான வைத்திலிங்கம் என்ற பெயரையே சூட்டினார்கள்.

## பள்ளிப்பருவம்

முதல் வகுப்பு பள்ளியில் சேர்ப்பதற்காக

என்னுடைய வயதை ஏற்றி 15-1-1949 என்று எழுதி சேர்த்துவிட்டார்கள். எனக்கு பிறந்த பதிவு இல்லை. ஜாதக குறிப்பு தான் உள்ளது. ஆக பள்ளி சான்றிதழில் 15-1-1949 என்று இருக்கும். என் உண்மையான பிறந்த வயது 19-6-1950. எனக்கு பிறகு என்னுடைய தங்கைகள் கங்காபாய் 6-12-1951 அன்றும், சிறிய தங்கை இந்திராணி 12-7-1953 அன்றும் பிறந்தார்கள். அதற்கு பிறகும் இரண்டு தங்கைகள் பிறந்து இறந்துவிட்டார்கள். ஆக நாங்கள் மூன்று சகோதரர்கள் மூன்று சகோதரிகள். என்னுடைய அப்பா பழுத்த காந்தியவாதி. அதனால் என்னுடைய மூன்று சகோதரிகளுக்கும் நேரு குடும்ப பெயர்களையே வைத்தார்கள். வினோபாபாவின் பூமி தான இயக்கத்திற்கு நிலம் கொடுத்தார்கள்.

## இந்திராகாந்திக்கு வரவேற்பு

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு நெய்வேலியில் நிலக்கரியில் மின்சாரம் எடுக்கும் தொழிற்சாலையை திறப்பதற்கு அன்றைய முதலமைச்சர் காமராஜர் அவர்கள் அன்றைய பாரத பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவை அழைத்து கொண்டு எங்கள் கிராமத்திற்கு அருகில் இரண்டாவது உலக போரின் போது அமைக்கப்பட்ட விமான ஓடுதளத்தில் விமானத்தில் வந்து இறங்கி காரில் நெய்வேலிக்கு பயணம் ஆனார்கள். அப்போது இந்திராகாந்தியும் உடன் பஞ்சாயத்து தலைவர் வந்திருந்தார். விமான ஓடுதளத்தில் என் அப்பாவும் உளுந்தூர்பேட்டை அன்றைய சட்டமன்ற உறுப்பினர் கந்தசாமி படையாட்சியும் மாலையிட்டு வரவேற்றார்கள். என்னுடைய அக்கா ருக்மணி என்கிற சுலோச்சனா இந்திராகாந்திக்கு மாலையிட்டு வரவேற்றார்கள்.

என்னுடைய மூத்த அண்ணன் ராதாகிருஷ்ணன் என்கிற முத்துராம் அவர்களை அவருடைய நாலாவது வயதிலேயே எங்களுடைய உறவினர் உளுந்தூர்பேட்டை அடுத்த உ.நெமிலி என்ற கிராமத்தை சேர்ந்த அப்பர்சாமி ரெட்டியாருக்கு தத்து பிள்ளையாக 21-8-1948 அன்று சுவிகாரம் விழா எடுத்து கொடுத்து விட்டார்கள். ஆனாலும் அப்பர்சாமி இறந்துவிட்ட படியால் எங்கள் அண்ணன் எங்கள் ஊரிலேயே இருந்து பள்ளிப் படிப்பை முடித்து திருமணம் ஆன பிறகு தான் உ.நெமிலியில் குடியேறினார்கள்.

## பெரியம்மா காமாட்சியம்மாள்

பெரியம்மா காமாட்சியம்மாள் எங்கள் அம்மாவை தன்னுடைய கணவரின் தம்பிக்கு மணமுடித்து தன் வீட்டோடு வைத்து கொண்டார்கள். அப்போது எங்கள் குடும்பத்திற்கு சுமார் 40 ஏக்கருக்கும் மேல் நிலமும் அதில் 4 மோட்டார் பம்பு செட்டுகளும் 2 ஆயில் என்ஜின்களும் இருந்தது. 3 ஊரான மதியனூர், இலுப்பையூர், பச்சைவெளி ஆகிய ஊரில்களில் எங்கள் நிலங்கள் இருந்தன. அது மட்டும் அல்ல உளுந்தூர்பேட்டை ரயில்வே கேட்டிலிருந்து எங்கள் ஊர் 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும். ரெயில்வே கேட்டிலிருந்து உளுந்தூர்பேட்டை 3கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் . இரண்டாவது உலகப்போரின் போது ஏற்படுத்தப்பட்ட புகைவண்டி நிலையம். அந்த ரயில்வே கேட்டிற்கு அருகில் எங்களுக்கு ஒரு ரைஸ் மில் இருந்தது. தினமும் எங்கள் தந்தை நடந்து சென்று அந்த ரைஸ் மில்லை பராமரித்து வருவார்கள்.

எங்கள் வீட்டில் ஒரு ஆஸ்டின் கார் ஒரு பெட்டி வண்டி அதில் உள்ளே மெத்தை போட்டிருக்கும். இரு பக்கங்களிலும் படுதா துணியிலான மூடி போட்டிருக்கும். முன்னால் ஒரு அடிக்கின்ற மணி இருக்கும். இரண்டு காளை மாடுகள் குதிரையை விட வேகமாக செல்லக் கூடியது. வருடத்திற்கு ஒரு முறை அந்த காளை மாடுகளை மாற்றி கொண்டே இருப்பார்கள். ஒரு டயர் வண்டி, டிராக்டர், 30 பசு மாடுகள், 2 பெரிய தொம்பைகள், 2 பெரிய மரத்திலான பெரிய பெட்டிகள் வீட்டிலிருக் கும். இது மட்டுமல்ல இரண்டு திருமணத்திற்கு வேண்டிய அனைத்து பாத்திரங்கள் எங்கள் வீட்டிலிருக்கும். எப்போதும் 200 லிட்டர் பிடிக்க கூடிய 3 பேரல்களில் மண்ணெண்யை பெட்ரோல், டீசல் இருந்து கொண்டேயிருக்கும்.

## பெரியம்மாவின் பாசம்

எங்கள் பெரியம்மா வீட்டில் இருந்தபடியே அத்தனையும் நிர்வகித்து வந்தார்கள். சமையல் செய்வதற்கு ஒரு சமையல்காரர் வீட்டு வேலைக்கு ஒரு பெண் தினமும் வருகின்ற வண்ணார் நாவிதர் 3 ஊர் நிலங்களையும் பார்த்து கொள்ள ஒரு ஆராய்ச்சி, 3 பணியாட்கள் குடும்பத்துடன், பால் கரக்க ஒருவர், இப்படி அத்தனையும் பெரியம்மாவே நிர்வகித்து வந்தார்கள்.

எங்கள் பெரிய அண்ணனை தத்து எடுத்த உ.நெமிலி கிராமம் உளுந்தூர்பேட்டையிலிருந்து வடக்கு பக்கத்தில் 5 கிமீ தூரத்தில் உள்ளது. அங்கு சுமார் 50 ஏக்கர் நிலம் பெரிய வீடு இரண்டு

என்ஜின்கள் அத்தனையும் நிர்வகிக்க என் பெரியம்மா திருவாமூரில் இருந்து சீத்தாராம் ரெட்டியாரை குடும்பத்துடன் அழைத்து வந்து குடியமர்த்தி பார்த்து கொண்டார்கள். எங்கள் பெரியம்மாவிடம் எங்கள் அப்பா மரியாதை கருதி பேச கூட மாட்டார். எல்லாம் எங்கள் அம்மாவின் மூலம் தான் தகவல் போகும். எங்கள் அம்மாவை ஒரு தாயை போல் அன்பு செலுத்தி வளர்த்தார்கள்.

எங்கள் எல்லோரையும் எங்கள் பெரியம்மா அவர்கள் உயிருள்ளவரை தாயன்போடு பேணி வளர்த்தார்கள். எங்கள் 6 பேர்களையும் என் அம்மாவையும் சேர்த்து வரிசையாக உட்கார வைத்து சாதத்தை பிசைந்து உருண்டையாக்கி ஒவ்வொருவோரின் கையிலேயும் கொடுத்து சாப்பிட சொல்லுவார்கள். யார் யாருக்கு என்ன பொரியல் பிடிக்குமோ அத்தனையும் தனித்தனியே செய்து கொடுப்பார்கள். அந்த அளவிற்கு எங்கள் மீது பாசம் இருந்தது. அதே அளவிற்கு கண்டிப்பும் இருக்கும்.

சனிக்கிழமை தோறும் எங்கள் அனைவருக்கும் அவர்களே நல்லெண்ணெய் தேய்த்து குளிப்பாட்டு வது, வியாழக்கிழமை தோறும் மாலை எங்கள் அனைவரையும் உட்கார வைத்து திருஷ்டி சுற்றி போடுவது அவர்களின் வழக்கம். நாங்கள் எங்கள் அம்மாவை சுலபமாக ஏமாற்றி விடுவோம். ஆனால் எங்கள் பெரியம்மா அவர்களை மற்றொரு குழந்தை போல் பார்த்து கொண்டார்கள். இதை எழுதும் போது என் கண்களில் கண்ணீர் கோர்க்கிறது. அந்த வாழ்க்கை இனி கிடைக்காது.

எங்கள் பெரியம்மா என் பெரிய அண்ணன், அக்கா, நடு அண்ணன் சுப்ரமணியன் ஆகிய 3 பேர்களையும் உளுந்தூர்பேட்டையில் படிக்க வைத்தார்கள். அவர்கள் மூவரையும் காலையி லேயே தயார்படுத்தி மாட்டு வண்டியில் மூவரையும் ஏற்றி மதிய உணவு தயாரித்து வைத்து அதை ஊட்டுவதற்கு கட்டை ரெட்டியார் என்று அழைக்கப்படும் ராமசாமி ரெட்டியாரை வண்டியில் உட்கார வைத்து அவருக்கும் வண்டி ஓட்டும் ஆளுக்கும் சேர்த்து உணவு கொடுத்து அனுப்புவார்கள்.

உளுந்தூர்பேட்டையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து இருந்தார்கள். அங்குதான் ஒரு மாட்டு வண்டி மாலை வரை இருக்கும். பகலில் உணவு மாலை திண்பண்டங்கள் கொடுத்து கட்டை ரெட்டியார் வீட்டிற்கு அழைத்து வருவார்கள். எங்கள் பெரியம்மா உறவினர்களுக் கும் மற்றவர்களுக்கும் நிறைய திருமணங்களை நடத்தி வைத்திருக்கின்றார்கள். எங்கள் ஊரில் உள்ள பெண்களை திருவாமூரில் கொடுத்து அந்த தெருவே மதியனுரா் தெரு என்று பேர் பெற்றது. அதே போல் திருவாமூரில் இருந்து பெண் எடுத்து மதியனுரரில் கொடுத்திருக்கிறார்கள்.

## தான தர்மங்கள்

எங்கள் காலனியில் எந்த திருமணம் நடந்தாலும் முதல் நாள் இரவு திருமண வீட்டார்கள் மேள தாளத்தோடு எங்கள் வீட்டிற்கு வருவார்கள். அவர்களுக்கு வேண்டிய கூரை புடவை, வேட்டி துண்டு, தங்கத்திலான தாலி, இரண்டு மாலைகள், வெற்றிலை பாக்கு, சந்தனம், குங்குமம் அத்தனை யும் ஒரு தட்டில் வைத்து எங்கள் பெரியம்மா கொடுப்பார்கள். அவர்களை எல்லோரும் கும்பிட்டு அதை வாங்கி மேள தாளத்துடன் செல்வதை நான் பார்த்திருக்கிறேன். இரண்டு திருமணத்திற்கு வேண்டிய அத்தனை சமையல் பாத்திரங்கள், எவர்சில்வர், அலுமினிய பாத்திரங்கள், அண்டா குண்டாக்கள், பந்தி பாய்கள் அத்தனையும் எங்கள் வீட்டிலிருக்கும்.

எங்கள் ஊரை சுற்றியுள்ள அத்தனை கிராமங்களிலிருந்தும் திருமணத்திற்காக வந்து கேட்பார்கள். அவர்களுக்கு டயர் வண்டியில் ஏற்றி கொடுத்து அனுப்புவார்கள். திரும்பி பாத்திரங்கள் வந்ததும் அதை கழுவி ஈயம் பூசி வைத்து விடுவார்கள். இவையெல்லாம் எந்த பிரதி பலனையும் பார்க்காமல் சேவையாக செய்வார்கள். பணம் காசு ஏதுவும் கிடையாது. வருடாவருடம் வரும் சரஸ்வதி பூஜை அன்று 9 நாட்களிலும் எங்கள் வீட்டில் வைத்திருக்கும் மடித்து வைத்திருந்த மரத்திலான படிக்கட்டுகளை கூட பிரித்து வைத்து சுமார் 400 பொம்மைகளை அதில் அடுக்கி தினமும் மாலையில் பூஜை செய்து அக்கம்பக்கத்து பிள்ளைகளை வரவழைத்து பிரசாதம் கொடுப்பார்கள்.

எங்கள் பெரியம்மா எங்கள் நடு அண்ணன் சுப்ரமணியன் அவர்களுக்கும் நடு தங்கை கங்காபாய் அவர்களுக்கும் 21–1–1968 ஆம் ஆண்டு நடந்த திருமணத்தை அடுத்து ஒரு வாரத்தில் இறந்துவிட்டார்கள். எங்கள் ஊரின் காவல் தெய்வம் மறைந்துவிட்டது. அதன்பிறகு எங்கள் குடும்பம் விதியின் கைகளில் விளையாட்டு பொம்மையானது.

**– வருவார்கள்**

# கண்ணீர் அஞ்சலி

புதுவை மாநிலத்தில் ஒரு மிக மூத்த அரசியல்வாதியும், புதுச்சேரி முன்னாள் முதல்வருமான திரு.M.D.R.ராமச்சந்தின் ரெட்டியார் டிசம்பர் 8–12–2024 அன்று காலமானார். இத்துயரமான தருணத்தில் அன்னாரை இழந்து வாடும் அவர் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு, ஆன்மா மோட்சத்தை அடைய டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலச் சங்கத்தின் சார்பில் இறைவனை வேண்டுவோம்.



# கண்ணீர் அஞ்சலி

**டே**க்பான் ஆறு மாநில ரெட்டி நலச்சங்கத்தின் மதுரை செயற்குழு உறுப்பினரும், மதுரை ஹோட்டல் கிராண்ட் சென்ட்ரல் கூட்டுரிமையாளருமான 67 வயதுடைய ரெட்டி இன பற்றாளர், நம் இனத்திற்கு சேவை செய்வதை தன் உயிர் மூச்சு என வாழ்ந்த தன்னலமற்ற சொந்தம் தினம் நல்ல செய்திகளை ஊடகங்களில் பகிர்ந்து அனைவரும் சிறப்புற்று வாழ வாயாரவும் மனதளவிலும் வாழ்த்தி வந்த மதுரை எம்.சிவசங்கரன் ரெட்டியார் 21.11.2024 அதிகாலை 2 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதி ஊர்வலம் 21.11.2024 மாலை 5 மணியளவில் மதுரை ஸ்ரீ நிகேதன் அப்பார்ட்மெண்ட், பிள்ளையார் கோயில் தெரு, எஸ்.எஸ்.காலனியில் நடைபெற்றது. அன்னாரின் ஆன்மா மோட்சத்தை அடைய இறைவனை பிரார்த்திப்போம். அன்னாரை இழந்து வாடும் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலை டேக்பான் ஆறு மாநில ரெட்டி நல சங்கத்தின் சார்பில் தெரிவித்து கொள்கிறோம். அன்னாரின் இறப்பு ஒட்டு மொத்த ரெட்டி சமுதாயத்திற்கு பேரிழப்பாகும்.



# கண்ணீர் அஞ்சலி



மூன்று மாநில ரெட்டி நலச் சங்கத்தின் ஆற்றல்மிகு பொதுச் செயலாளராக நீண்ட காலம் சேவை செய்து வழக்கறிஞர் தொழிலையும் செம்மையாக செய்து வந்த வேலூர் திரு.என். கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் 20.08.2024 அன்று இறைவனடி சேர்ந்தார். டேக்போன் ஆறு மாநில சங்கத்தின் மூத்த ஆலோசகராக செயல்பட்டு வந்தவர். கர்நாடகா ரெட்டி சொந்தங்களோடு நெருங்கிய தொடர்பில் இருந்தவர். குறுகிய காலம் நோயால் பாதிக்கப்பட்டு 87 வயது நிறைவு பெற 20 நாட்கள் இருந்த நிலையில் காலமானார்.

திரு.கிருஷ்ணமூர்த்தி ரெட்டியாரை சில மாதங்களுக்கு முன்பு சந்தித்த போது எங்களோடு ஆர்வமாக புகைப்படம் எடுத்து கொண்டார். உணவருந்தாமல் செல்ல கூடாது என அன்பால் கட்டி போட்டு உணவருந்தி சிறிது ஓய்வெடுக்க சொல்லி வீட்டு வாசல் வரை வந்து இன்முகத்தோடு வழியனுப்பி வைத்தார். திருச்சி திரு.நாராயணன் ரெட்டியார், சென்னை திரு.நரசிம்ம ரெட்டியாரோடு இணைந்து சங்கத்தை சிறப்பாக வழி நடத்தியது ரெட்டி சொந்தங்கள் அனைவரும் அறிந்ததே. ஆறு மாநில ரெட்டி சங்க செயல்பாடுகளை வெகுவாக பாராட்டி கடிதங்கள் பல எழுதியுள்ளார். போனிலும் நேரிலும் மனதார பாராட்டுவார்.

ஆறு மாநில சங்கத்தின் சார்பில் முதல் கூட்டத்தை வேலூரில் மிகச் சிறப்பாக நடத்தி அனைவரையும் கௌரவப்படுத்திய பெருமை திரு.கிருஷ்ணமூர்த்தி ரெட்டியாரைச் சாரும். A Biography of Sri. N.Krishnamurthy என்ற நூலில் அனைத்து விபரங்களையும் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. பிரதி வேண்டுவோர் திரு.கிருஷ்ணமூர்த்தி ரெட்டியாரின் மகன் திரு.விமல்ராஜ் ரெட்டியார் (செல் நெம்பர் 9994613713) எண்ணுக்கு செல்போனில் தொடர்பு கொண்டு கேட்கவும். திரு.விமல்ராஜ் ரெட்டியாரும் வேலூரில் மிகப் பிரபலமான வழக்கறிஞராவார். திரு. கிருஷ்ணமூர்த்தி ரெட்டியாரின் வாழ்க்கை வரலாற்றை ஒவ்வொரு ரெட்டி இனத்தவரும் அவசியம் படிக்க வேண்டும்.

அன்னாரின் ஆன்மா மோட்சத்தை அடைய இறைவனை பிரார்த்திப்போம்.

# கண்ணீர் அஞ்சலி



திண்டிவனம் வட்டம், கள்ளகொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த லேட். இராமானுஜம் ரெட்டியாரின் துணைவியாரும், அனுஜ் டைல்ஸ், அரவிந்த் செராமிக்ஸ் நிறுவனங்களின் உரிமையாளர் திரு.ஆர்.குமார் ரெட்டியார் அவர்களின் தாயார் திருமதி. ராஜம்மாள் (வயது 95) 3.3.2024 இரவு வைகுந்த பதவி அடைந்தார். 4.3.2024 அன்று அன்னாரின் இறுதி ஊர்வலம் திண்டிவனம் வட்டம், கள்ளகொளத்தூர் கிராமத்தில் நடைபெற்றது. இத்துயரமான தருணத்தில் அன்னாரை இழந்து வாடும் அவர் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு, அம்மையாரின் ஆன்மா மோட்சத்தை அடைய டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலச் சங்கத்தின் சார்பில் இறைவனை வேண்டுவோம்.

# டேக்பான் நிர்வாக குழு பட்டியல்

**காப்பாளர்:** திருச்சி கே.நாராயணன் ரெட்டி

**முதன்மை சங்க ஆலோசகர்:** வேலூர் என்.கிருஷ்ணமூர்த்தி ரெட்டி

**தலைவர்:** புதுச்சேரி ம.வெ.வைத்திலிங்கம் ரெட்டி

**சங்க ஆலோசகர்கள்:** கொல்லம் சங்கர் ரெட்டி, சென்னை நரசிம்மன் ரெட்டி, புதுச்சேரி வெ.ராமச்சந்திரன் ரெட்டி, ஓசூர் ஒய்.வெங்கடசாமி ரெட்டி, கடலூர் ல.ஜெயச்சந்திரன் ரெட்டி, மதுரை ஆர்.பட்டாபிராமன் ரெட்டி, கோயம்புத்தூர் டாக்டர் ஜனார்த்தன் ரெட்டி

**சங்க செயல் தலைவர்கள்:** விளாத்திகுளம் ஆர்.செல்வகுமார் ரெட்டி, துறையூர் கே.ஆர்.ரவி ரெட்டி

**சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்:** ஜெக.நேமிதாஸ்

**இணை ஒருங்கிணைப்பாளர்:** நாகேந்திரன் ரெட்டி

**கேரள மாநில துணைத் தலைவர்:** ஆர்.சுரேஷ் ரெட்டி

**ஆந்திர மாநில ஒருங்கிணைப்பாளர்:** திருப்பதி வெங்கம்பள்ளி தாமோதர ரெட்டி

**தமிழ்நாடு தெற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்:** மதுரை சீனிவாசன் ரெட்டி

**துணைத்தலைவர்கள்:** ஆர்.பட்டாபி ரெட்டி, திருவண்ணாமலை வீரமணி ரெட்டி, டி.வி.ராஜ் வெங்கட் ரெட்டி, எர்ணாவூர் ரவீந்திரநாத் ரெட்டி, புதுச்சேரி எம்.சிவசங்கரன் ரெட்டி எம்.எல்.ஏ., திருவண்ணாமலை எஸ்.கோவிந்தசாமி ரெட்டி, சென்னிகுளம் எல்.ராமசுப்பிரமணியம் ரெட்டி, சிவகாசி ஆர்.சண்முகம் அய்யா ரெட்டி

**தெலுங்கானா மாநில துணைத் தலைவர்:** ரவி ரெட்டி

**கர்நாடக மாநில துணைத்தலைவர்:** கிரீஷ் ரெட்டி

**பொதுச் செயலாளர்:** திண்டிவனம் ஜி.கிருபாகரன் ரெட்டி

**நிர்வாக பொதுச் செயலாளர்:** புதுச்சேரி ஜெ.சந்திரசேகரன் ரெட்டி

**பொருளாளர்:** புதுச்சேரி எஸ்.தர்மசிவம் ரெட்டி

**இணைச் செயலாளர்கள்:** புதுச்சேரி ஆர்.பிரபாகரன் ரெட்டி, கும்பகோணம் எஸ்.ரமேஷ் ரெட்டி, கோயம்புத்தூர் பி.கிருஷ்ணமூர்த்தி ரெட்டி, கேரளா ஆர்.ஜனார்த்தன் ரெட்டி, சென்னை ஜி.ஆர்.ரவிச்சந்திரன் ரெட்டி, திண்டிவனம் ஆர்.பாபு ரெட்டி, திருவண்ணாமலை வெங்கடாசலபதி ரெட்டி, சென்னை வி.ரவிச்சந்திரன் ரெட்டி

**எஸ்.டி.பி.சி. ஓ.பி.சி. பிரிவு தலைவர்:** திருவண்ணாமலை எஸ்.டி.தனக்கோட்டி ரெட்டி

**வழக்கறிஞர் பிரிவுத் தலைவர்:** சென்னை ஜி.ஆர்.ரவிச்சந்திரன் ரெட்டி

**மகளிர் பிரிவு தலைவி:** மதுரை எஸ்.தேவசேனா ரெட்டி

**மகளிர் பிரிவு செயலாளர்:** டாக்டர் ஆர்.அனிதா சாந்தகுமார் ரெட்டி

**இளைஞர் பிரிவு தலைவர்:** டாக்டர் டி.எஸ்.அமர்பிரசாத் ரெட்டி

**இளைஞர் பிரிவு செயலாளர்:** திண்டிவனம் எஸ்.சீனிவாசன் ரெட்டி

**நிர்வாகக் குழு உறுப்பினர்கள்:** மதுரை எம்.சிவசங்கரன் ரெட்டி, மதுரை டி.சதீஷ்குமார் ரெட்டி, சாத்தூர் என்.சந்திரபால் ரெட்டி, தூத்துக்குடி பி.கணேசன் ரெட்டி, கடலூர் ரவிச்சந்திரன் ரெட்டி, கேரள வேணுகோபால் ரெட்டி, சென்னை முத்துகிருஷ்ணன் ரெட்டி, கேரளா, கொல்லம் எஸ்.ராமராஜ் ரெட்டி, வேலூர் கே.விமல்ராஜ் ரெட்டி, திருவனந்தபுரம் ஆர்.கிருஷ்ணசுவாமி ரெட்டி, செங்கல்பட்டு ஆத்தூர் சி,பாலகிருஷ்ண ரெட்டி, கோட்டயம் ஆர்.விசுவநாதன் ரெட்டி, திருச்சி வீ.ராஜேந்திரன் ரெட்டி, புதுச்சேரி பி.நரசிம்மன் ரெட்டி, பட்டுக்கோட்டை ராம்குமார் ரெட்டி, புதுச்சேரி வெ.ஜெயப்பிரகாஷ் ரெட்டி, சேலம் ஜி.காந்திராமன் ரெட்டி, புதுச்சேரி பி.வாசு ரெட்டி, கரூர் சுப்புராமன் ரெட்டி, காரைக்கால் ஞானசேகரன் ரெட்டி, மதுரை கே.குருநாதன் ரெட்டி, திண்டிவனம் பாலப்பட்டு சீனிவாச ரெட்டி.

## அன்பான வேண்டுகோள்!

அன்பு சொந்தங்களே! வணக்கம். நலம் நாட நாட்டம். நமக்கு நாம். நாடு நமது.

ரெட்டி இனத்திற்கு தாங்கள் ஆற்றிவரும் தொண்டினை நன்றியோடு எண்ணி மகிழ்கிறேன்! 'ரெட்டி பண்பாடு' – காலாண்டு இதழ் பெரியவர்களின் ஆலோசனைகளின்படி 'டேக்பான்' ஆறு மாநில ரெட்டி நல சங்கத்தின் மூலம் தொடர்ந்து புதுப் பொலிவுடன் தங்கள் கரத்தில் தவழ்கிறது. தொடர்ந்து உங்கள் ஆதரவையும், ஆலோசனைகளையும் நல்கிட விழைகின்றேன்.

தங்கள் பகுதியில் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒளிப்படத்துடன் அனுப்பி வைத்தால் 'ரெட்டி பண்பாடு' இதழில் வெளியிட ஏதுவாக இருக்கும்!

நமது 'ரெட்டி பண்பாடு' இதழ் நமது இனத்தவர்களின் சாதனைகள், சரித்திரங்கள், ஆலயங்களின் ஆன்மீக செய்திகள், மருத்துவர்களின் ஆலோசனைகள், தொழில் அதிபர்களின் ஆலோசனைகள், இல்லத்தரசிகளின் இனிய சமையல் குறிப்புகள், கல்வி, விவசாயம், தொழில் – வேலைவாய்ப்பு செய்திகள், திருமண தகவல் செய்திகள், ரெட்டி சங்கங்களின் தொண்டு செய்திகள், இன்னும் பல செய்திகளுடன் 'ரெட்டி பண்பாடு' தொடர்ந்து வெளிவர உள்ளது. தங்களின் ஆதரவை நல்கிட மீண்டும் வேண்டுகிறேன். நன்றி!

### சந்தா விபரம்

புரவலர் சந்தா ரூபாய் – 15 ஆயிரம்.
ஆயுள் சந்தா ரூபாய் – 5 ஆயிரம்.




### விளம்பரக் கட்டணங்கள்!

வருடத்திற்கு (4 இதழ்களுக்கு)

| | |
|---|---|
| முழு பக்கம் பல வண்ணம் | – ரூபாய் 8,000 |
| அரைப்பக்கம் பல வண்ணம் | – ரூபாய் 4,000 |
| முழு பக்கம் கருப்பு – வெள்ளை | – ரூபாய் 4,000 |
| அரைப்பக்கம் கருப்பு – வெள்ளை | – ரூபாய் 2,000 |
| அட்டை 2 வது பக்கம் (பலவண்ணம்) | – ரூபாய் 10,000 |
| அட்டை 3 வது பக்கம் (பலவண்ணம்) | – ரூபாய் 10,000 |
| கடைசி அட்டை 4ம் பக்கம் (பலவண்ணம்) | – ரூபாய் 12,000 |

### சந்தா அனுப்ப வேண்டிய விபரம்.

**இந்தியன் வங்கி, ரெட்டியார் பாளையம் கிளை, பாண்டிச்சேரி, டேக்பான் ரெட்டி நல சங்கம், S.B.A/C.No. 6932384915, I.F.S.Code.No.IDIB000R076.**

**ம.வெ.வைத்திலிங்கம்,** வழக்குறைஞர்,
தலைவர் டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலசங்கம். தொடர்புக்கு: 98431 33287.

**ஜி.கிருபாகரன்,** வழக்குறைஞர்,
பொதுச்செயலாளர், டேக்பான் ரெட்டி நலச்சங்கம். தொடர்புக்கு: 94433 55481.

**அலுவலக முகவரி:**

24, மெயின் ரோடு, சித்தன்குடி, பாண்டிச்சேரி – 605013.

e-mail: vaithyad@yahoo.com Website: reddysindia.com










Centrally located - walkable distance to Beach and Major attractions.

- 57 Centralised AC Rooms.
- Multi-cuisine Pure Vegetarian Restaurant
- 5 Banquet Halls with separate Dining facility (Capacity 30 to 400 Pax.)
- Ample parking space

There is a Surguru wherever you are in Pondicherry

SURGURU Restaurant
Mission Street, +91-413-4308083

SURGURU Restaurant
100ft Road, +91-413-4308088

SURGURU SPOT
Nehru Street, +91-413-4308084

SURGURU Restaurant
S V Patel Road, +91-413-4200201

HOTEL SURGURU
No.104, S. V. Patel Salai, Pondicherry – 605001. Phone: 0413-4200201
Email: booking@hotelsurguru.com Website: hotelsurguru.com




Hotel Jayaram

**MR. V.RAMACHANDRAN** B.A., B.L.,
Managing Director

90, Kamaraj Salai,
Pudhuchery - 605 011
Ph: (0413) 336877, 227191 to 98

**• No Taxes • Checkout Time 24 Hours**
**• Tariff Includes T.V. and Other Facilites**

**Facilites**

- Luxuriously furnished Rooms and Suites
- STD and FAX Facilites
- CCTV with 25 TV Channels in all Rooms
- Runnung Hot & Cold Water
- Credit Cards Accepted
- Doctor on Call
- Travel Agent, Rent a Car
- Laundry & Cleaners
- Spacious Car Parking
- Cuisine, Vegetarian South Indian, North Indian
- Banquet & Conference Facilites





E-mail: hoteljayaram@gmail.com Web: www.hoteljayaram.com